# செந்தமிழ்

தொகுதி : 93 ஏப்ரல் 1999 பகுதி : 4

திங்கள் இதழ்

முதன்மை ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை—1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பி.எச்டி.

ஏப். 1992

# தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி, | தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே.எஸ்.டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஜயா | உறுப்பினர் |
| திரு. அ. தட்சிணாமூர்த்தி | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |

# செந்தமிழ் ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பேரறிஞர் | தமிழண்ணல் | மதுரை |
| பேரறிஞர் | செ. கந்தசாமி | முதல்வர் |
| பேரறிஞர் | ம.ரா.போ.குருசாமி | கோயம்புத்தூர். |
| பேரறிஞர் | ச.மெய்யப்பன் | சிதம்பரம் |
| பேரறிஞர் | சி.கதிர் மகாதேவன் | துணைவேந்தர், தஞ்சை |
| பேராசிரியர் | கு.துரைராசு | எட்டயாபுரம் |
| பேரறிஞர் | அ.அ.மணவாளன் | சென்னை |
| பெரும்புலவர் | இரா. இளங்குமரன் | அல்லூர், திருச்சி. |
| பேரறிஞர் | ந. மாணிக்கம் | மதுரை. |
| பேரறிஞர் | எஸ்.எம்.கமால் | இராமநாதபுரம். |
| பேரறிஞர் | ஈ.கே. இராமசாமி | மதுரை. |
| பேராசிரியர் | சே. அரிராமநாதன் | மதுரை. |

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

முதன்மை ஆசிரியர் **மா. தனுக்கோடிபாண்டியன்** பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் **நா. பாலுசாமி**
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பி.எச்டி.

# பொருளடக்கம்

1. எல்லோர்க்கும் தொல்காப்பியம் . . . 103

*பேரறிஞர். நா. பாலுசாமி*

2. சமுதாயத்தில் தொலைக்காட்சியின் தாக்கம் . . . 109

*பேரறிஞர். மு. அருணகிரி*

3. தமிழ் இதழ்கள் . . . 121

*பேராசிரியர் வீ. கோபால்*

4. பதிற்றுப்பத்தின் சொற்கொடை - ஆநியம் . . . 126

*பேரறிஞர். அ.மா. பரிமணம்*

5. பதிற்றுப்பத்தின் சொற்கொடை - குடைச்சூல் . . . 132

*பேரறிஞர். அ.மா. பரிமணம்*

6. பதிற்றுப்பத்தின் சொற்கொடை - உன்னத்துப்பகைவன் . . . 136

*பேரறிஞர். அ.மா. பரிமணம்*

-பேரறிஞர் நா. பாலுசாமி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

## இடையியல்

### சூத்திரம் 256 :

#### ('ஓ' என்னும் இடைச்சொல் )

*பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை*
*தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ*
*இருமூன்று என்ப ஓகா ரம்மே.*

பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை, சிறப்பு என 'ஓ' என்னும் இடைச்சொல் ஆறுவகைப் பொருள்களில் வரும்.

(எ-டு) 'யானோ தேறேன் அவர் பொய் வழங்கலரே' - யானோதேறேன் என்னும் தொடர் தேறுவார் பிறரினின்றும் பிரித்தலால் பிரிநிலை.

2. சாத்தன் உண்டானோ? என்பது வினா (கேள்வி)

3. 'யானோ அரசன்' - யான் அரசன் அல்லன் என எதிர்மறைப் பொருள் தருதலால் எதிர்மறை.

4. வாள் கூரியதோ - வாள் மழுங்கியது என்னும் ஒழிந்த பொருளைத் தருதலின் ஒழியிசை.

5. இவள் மானுட மகளோ, தேவமகளோ இவள் யார்? - யார் என்பதைத் தெரிந்துகொள்ள நிற்பதால் தெரிநிலை.

6. 'ஓ ஓ பெரியன்' - இது அவனது சிறப்புணர்த்தி நிற்றலின் சிறப்புப் பொருளில் வந்தது.

### சூத்திரம் 257 :

#### ('ஏ' என்னும் இடைச்சொல்)

*தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே*
*ஈற்றசை இவ்வைந்து ஏகா ரம்மே*

தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை ஆகிய ஐந்து பொருள்களில் 'ஏ' என்னும் இடைச்சொல் வரும்.

(எ-டு) 1. 'உண்டோ மறுமை' – மறுபிறப்பு உண்டு என்னும் தெளிவுப் பொருள் தருதலின் தேற்றம்.

2. நீயே கொண்டாய் – இது வினாப் பொருள் தருதலின் வினா.

3. அவருள் இவனே கள்வன் – இது பிறரிலிருந்து கள்வனைப் பிரித்தலின் பிரிநிலை.

4. நிலனே, நீரே, தீயே, வளியே – என எண்ணிக்கைப் பொருள் தருதலின் எண்ணுப் பொருள்.

5. மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே – செய்யுளின் இறுதியில் வருதலின் ஈற்றசை.

## சூத்திரம் 258 :

### ('என' – இடைச்சொல்)

**வினையே குறிப்பே இசையே பண்பே**
**எண்ணே பெயரொடு அவ்வறு கிளவியும்**
**கண்ணிய நிலத்தே எனவென் கிளவி**

'என' – இவ்விடைச் சொல் வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர் என்னும் ஆறு பொருள்களில் வரும்.

(எ-டு) 1. 'மலைவான் கொள்கென உயிர்பலி தூஉய்' – கொள்க என்னும் வினையை அடுத்து வந்தமை காணலாம்.

2. மனம் துண்ணெனத் துடித்தது – துண் என்பது மனக் குறிப்பு.

3. ஒல்லென ஒலித்தது – ஒல் என்பது ஓசை (இசை); எனவே இசைப் பொருளில் வந்தது.

4. வெள்ளென விளர்த்தது – வெள்ளை நிறம் குறித்த வெள் என்பதோடு வந்தமையின் பண்பு.

5. நிலனென, நீரென, தீயென – நிலனும் நீரும் தீயும் என எண்ணுப் பொருள் தந்தமை காண்க.

6. பாரி என ஒருவன் உளன் – "என" என்பது பாரி என்னும் பெயரொடுவந்தமையால் பெயர்ப் பொருள்.

## சூத்திரம் 259 :

### (என்று – இடைச்சொல்)

**என்றென் கிளவியும் அதனோ ரற்றே**

'என்று' என்னும் இடைச்சொல்லும் 'என' என்ற இடைச்சொல்லுக்குரிய பொருள்களைத் தரும். மேலே காட்டிய எடுத்துக் காட்டுகளில் என என்னும் இடத்தில் என்று என்னும் இடைச்சொல் தருக.

## சூத்திரம் 260 :

### (தில் – சிறப்பு விதி)

**விழைவின் தில்லை தன்னிடத்து இயலும்**

முன் 253 ஆம் சூத்திரத்தில் தில் என்னும் இடைச்சொல்லுக்குக் கூறப்பெற்ற மூவகைப் பொருள்களுள் ஒன்றான விழைவு (விருப்பம்)ப் பொருள்தரும் தில் என்னும் இடைச்சொல் தன்மைக்கே வரும்; முன்னிலை, படர்கை இடங்களில் வாராது.

## சூத்திரம் 261 :

### (ஏ, ஓ – இடைச்சொற்களுக்குச் சிறப்பு விதி)

**தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும்**
**அளபின் எடுத்து இசைய என்ப**

தெளிவுப் பொருள் தரும் "ஏ" என்னும் இடைச்சொல்லும், சிறப்பு என்னும் பொருள் தரும் "ஓ" – இடைச்சொல்லும் ஆகிய இரண்டு இடைச்சொற்களும் அளபெடைகளாக வரும் என்பது கவனிக்கத் தகும். எடுத்துக்காட்டுகள் அவ்வச்சூத்திர உரையில் காண்க.

## சூத்திரம் 262 :

### (மற்று – இடைச்சொல்)

**மற்றென் கிளவி வினைமாற்று அசைநிலை**
**அப்பால் இரண்டென மொழிமனார் புலவர்**

மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்றுப் பொருளிலும் அசைநிலைப் பொருளிலும் வரும்.

(எ-டு) 1. 'மற்றறிவாம் நல்வினை யாம் இளையம்' - இப்போது யான் இளைஞன்; அறத்தைப் பின்னர் செய்யலாம் என்பது இவ்வடியின் பொருள். பிற்காலத்து வினை மாற்றுதலின் வினைமாற்றுப் பொருள்.

2. 'அது மற்று அவலம் கொள்ளாது நொதுமல் கலுழும்' - இவ்வடியில் 'மற்று' என்பது பொருளின்றி அசைநிலையாய் வந்துள்ளது காண்க. மற்றொன்று சூழினும் தான் முந்துறும் என்பதில் 'மற்று' என்பது 'பிறிது' என்னும் பொருளில் வந்துள்ளமையும் காண்க.

## சூத்திரம் 263 :

### (எற்று - இடைச்சொல்)

*எற்றென் கிளவி இறந்த பொருட்டே*

எற்று என்னும் இடைச்சொல் இறந்தது அல்லது கழிந்தது என்னும் பொருளில் வரும்.

(எ-டு) 'எற்றென் உடம்பின் எழில்நலம்' - எனது உடம்பின் எழிலும் நலமும் இறந்தன (கழிந்தன) எனப் பொருள் படுவது காண்க.

## சூத்திரம் 264 :

### (மற்றையது - இடைச்சொல்)

*மற்றையது என்னும் கிளவி தானே*
*சுட்டுநிலை ஒழிய இனம்குறித் தன்றே*

மற்றையது என்னும் இடைச்சொல் சுட்டப்பட்டதனைத் தவிர்த்து, அதன் இனம் குறித்து நிற்கும். மற்றையது - மற்றை என்பதே இடைச்செல்; மற்றையது என்பது பெயர்ச்சொல். ஆனால் சூத்திரத்தில் மற்றை என்று கூறாமல் மற்றையது எனக் கூறியதற்குக் காரணம், அச்சொல் பெரும்பாலும் பகுதியாக நின்று விகுதிபெற்று பெயர்ச் சொல்லாகியே வரும் என்பதே.

ஒருவன் துணிக்கடைக்குச் சென்று ஓர் ஆடை கேட்கிறான். அவ்வாடை தனக்குப் பிடிக்கவில்லை என்றால் அவன்

மற்றையது கொண்டுவா என்று கேட்பான். அது தான் கேட்ட ஆடைக்கு இனமாகிய மற்றொரு ஆடை குறித்து நிற்கும் என்பது உணர்க.

**சூத்திரம் 265 :**

**(மன்ற – இடைச்சொல்)**

**மன்றவென் கிளவி தேற்றம் செய்யும்**

மன்ற என்னும் இடைச்சொல் தெளிவுப் பொருளை உணர்த்தும்.

(எ–டு) 'கடவுள் ஆயினும் ஆக மடவை மன்ற வாழியமுருக் கே' – மடவையே என்று தெளிதல் பொருளில் வந்தது.

**சூத்திரம் 266 :**

**(தஞ்சம் – இடைச்சொல்)**

**தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே**

தஞ்சம் என்னும் இடைச்சொல் எளிமை (இலேசானது) என்னும் பொருளில் வரும். இன்று இச்சொல் அடைக்கலம் என்னும் பொருளில் பெயர்ச் சொல்லாக வழங்குகிறது.

(எ–டு) 'முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்' – இவ்வடியில் அரசன் ஒருவன் பகைவரைப்பார்த்து, நீங்கள் முறைப் படி வந்து இரந்தால் எனது அரசைத்தருவதும் எனக்கு மிக எளிதாகும் எனச் சூளுரைக்கிறான். இங்கு எளிமை என்னும் பொருள் தந்தது.

**சூத்திரம் 267 :**

**(அந்தில் – இடைச்சொல்)**

**அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவியென்று**

**ஆயிரண்டாகும் இயற்கைத்து என்ப**

அந்தில் என்னும் இடைச்சொல் ஆங்கு என்னும் இடப் பொருளிலும் அசைநிலையிலும் ஆகிய இருபொருளில் வரும்.

(எ–டு) 1. 'வருமே – சேயிழை அந்தில் கொழுநன் காணிய' – அப்பெண் தன் கணவனைக் காணும் பொருட்டு அங்கு வருவாள் என்பது இவ்வடியின் பொருள். அங்கு அந்தில்

என்பது இடம் என்னும் பொருள்தந்தது.

2. அந்தில் – கச்சினன், கழலினன் – இதில் அந்தில் என்பது வெறும் அசையாக மட்டும் நின்றது, பொருள் இல்லை. (ஆங்கு என்பது 'அ' என்னும் சாரியை ஏற்று 'ஆங்க' என வந்தது).

## சூத்திரம் 268 :

### (கொல் – இடைச்சொல்)

கொல்லே ஐயம்

கொல் என்னும் இடைச்சொல் ஐயப்பொருளில் (சந்தேகம்) வரும்.

(எ–டு) 1. குற்றிகொல்லோ, மகன் கொல்லோ. – கொல் என்பது ஐயப்பொருள் தந்தது.

2. கற்றதனால் ஆயபயன் என்கொல் – இங்கு அசைநிலைப் பொருள் தந்ததும் கொள்க.

## சூத்திரம் 269 :

### (எல் – இடைச்சொல்)

எல்லே இலக்கம்

எல் என்னும் இடைச்சொல் இலங்குதல் என்னும் பொருளில் வரும்.

(எ–டு) எல்வளைத் தோழி – இலங்குகின்ற வளையல் என்பது பொருள். எல்–இலங்குதல் பொருளில் வந்தது. எல்லே இரக்கம், எல்லே விளக்கம் எனவும் பாடவேறுபாடுகள் கொள்வர்.

(தொடரும்)

* * *

# சமுதாயத்தில் தொலைக்காட்சியின் தாக்கம்

*–பேரறிஞர் மு. அருணகிரி*

இந்திய நாட்டில் 1959இல் அறிமுகமான தகவல் தொடர்பு சாதனங்களுள் ஒன்றான தொலைக்காட்சி மிகக் குறுகிய காலத்திலேயே அரசியல், பொருளாதாரச் சமுதாய மாற்றங்களுக்குக் காரணமாக அமைந்துள்ளது. கல்வி ஒளிபரப்புக்கெனவே தொடங்கப்பெற்ற தொலைக்காட்சி தகவலியல் துறையில் மிகவும் வலிமை வாய்ந்த சாதனமாகவும், பிற சாதனங்களைவிட அனைவரையும் மிக எளிதில் ஈர்க்கக் கூடியதாகவும் வளர்ந்துவிட்டது. அதற்குக் காரணம், அதன் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றமும் அதனை வெளியிடுவதில் கையாண்ட பல்வகையான உத்திகளுமே. ஓர் அலங்காரப் பொருளாகவே தொடக்கத்தில் கருதப்பெற்ற இத்தொலைக்காட்சி, திரைப்படங்களையும், திரையுலகு சார்ந்த நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பத் தொடங்கியபொழுது உயர் மற்றும் மேல் நடுத்தர மக்களின் சாதனமாக இருந்த நிலை மாறி, பாமரர்களின் சாதனமாக மாறத் தொடங்கிவிட்டது. ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சார்ந்தோருக்குப் பயன்பட்டபொழுது, அதனால் ஏற்படும் தாக்கங்களும் மிகுதியாயின.

தாக்கம் என்பதை, சமுதாயத்தில் இருக்கும் பலதரப்பட்ட மக்களின் நடையுடை பாவனைகளிலும், உறவு முறைகளிலும், எண்ணத்திலும் ஏதேனும் ஒருவிதத்தில் ஏற்படுகின்ற மாற்றம் என விளக்கலாம். இத்தகைய மாற்றம் இச்சமுதாயத்தை மேன்மையடையச் செய்வதாகவோ, நிலை தாழ்ந்து வீழ்ச்சியடையச் செய்யும் தன்மையாகவோ அமையும்.

தகவல் தொடர்புத் துறையில் செயற்கைக் கோள்கள் பயன்படுத்தப்பட்ட நிலையும், இந்திய அரசின் தகவலியல் கொள்கையில் ஏற்பட்ட மாற்றமும் இந்தியாவில் தனியார் தொலைக்காட்சிகள் அதிகம் தோன்றுவதற்கு வழிவகுத்தன. இவற்றையும் வெளிநாட்டுத் தொலைக்காட்சிகளையும் இந்திய மக்கள் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கிட்டியது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை

1. செய்திகள் மற்றும் அவற்றைச் சார்ந்த உரையாடல், பேச்சு, பேட்டி.
2. திரைப்படங்கள், திரைப்பாடல்கள், திரையுலகு தொடர்பான பிற நிகழ்ச்சிகள்.
3. நாடகங்கள், தொடர் நாடகங்கள்
4 விளையாட்டு நிகழ்ச்சிகள்
5. கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள்
6. விளம்பரங்கள்
7. பிறதுறை – வேளாண்மை – மருத்துவம், இசை தொடர்பான நிகழ்ச்சிகள்.

என வகைப்படுத்தலாம்.

அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வித்தல், எனும் முப்பெரும் நோக்கங்களைக் கொண்டு செயல்பட வேண்டிய இச்சாதனம் வணிகத்தையும் முதன்மை நோக்கமாகக் கொள்ளத் தொடங்கியதால் சமுதாயத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்களும் அதிகமாயின. இச்சூழலில் சமுதாயத்திலுள்ள ஒரு சில நிலையினரை இத்தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பாதித்திருக்கும் தன்மையை இங்குக் காணலாம்.

## குழந்தைகளிடம் ஏற்படுத்திய தாக்கம்.

தொலைக்காட்சியை அனைத்து வயதினரும் பயன்படுத்தினாலும், குழந்தைகள்தான் மிக அதிகமாகப் பயன்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எவ்வித வேறுபாடும் இல்லாமல் கிராம மற்றும் நகர்ப்புறக் குழந்தைகளை இவை ஈர்க்கின்றன. அண்மைக்கால ஆய்வு ஒன்று தொலைக்காட்சியின் அனைத்து நிகழ்ச்சிகளையும் பார்ப்பவர்கள் மற்ற வயதினரை விடக் குழந்தைகளே என்று கூறுகிறது. இதனால் இவர்களே மிக அதிக நேரம் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்கள் ஆகிறார்கள். இதனால்

இவர்களிடம் தொலைக்காட்சியின் தாக்கத்தை மிக அதிகமாகக் காணமுடிகிறது. எவ்விதத் தெரிவுமின்றி அனைத்து நிகழ்ச்சிகளையும் குழந்தைகள் பார்க்கின்ற சூழலில் இவர்களை வழிப்படுத்த இயலாத நிலையிலிருக்கும் பெற்றோர்களாலும், இவர்களிடம் ஏற்படும் பாதிப்பு இன்னும் அதிகமாகிறது.

குக்கிராமங்களையும் சென்றடையும் இத்தொலைக்காட்சி பிற சாதனங்களைவிட எளிதில் ஈர்க்கப்படுவதற்குக் காரணம் இதன் ஒலி, ஒளி (Sound and light) நிகழ்ச்சிகளே.

கிராமங்களில் வாழும் சிறுவர்கள் இதனால் நகரத்துச் சிறுவர்களைப் போல எல்லாம் தெரிந்தவர்கள் ஆகிறார்கள். கிராமத்து வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் இருப்பதும், ஊர்ப் பொதுமன்றத்தில் பொதுத் தொலைக்காட்சிப் பெட்டி மூலமாக, நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவதும் கிராமத்துக் குழந்தைகளை ஈர்த்து நகரக் குழந்தைகளோடு ஒத்த நிலையில் வைக்கின்றன. கிராமத்து முதியோர்களை விடக் குழந்தைகள் அதிகம் தெரிந்தவர்களாக இதனால் ஆக்கப்படுகின்றனர்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளால் தம்மைச் சுற்றிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் குழந்தைகளும் அறிவதால் இவர்களிடமும் மாற்றங்கள் ஏற்படுகின்றன். ஆனாலும் குழந்தைகளிடம் எதிர் விளைவுகளையே இன்றைய தொலைக் காட்சிகள் ஏற்படுத்துவதைப் பெரிதும் காணமுடிகிறது. மிகப் பெரிய வீட்டில் வாழும் குழந்தைகள், வண்ண வண்ண உடையணிந்து செல்லும் குழந்தைகள், தரமான விளையாட்டு மைதானங்களில் விளையாடும் குழந்தைகள், பல்வேறு உயர்நுகர் பொருட்களைப் பயன்படுத்தும் குழந்தைகள் போன்றோரைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் குழந்தைகள் அவற்றைப் பற்றி அறிந்துகொண்டாலும்கூட இத்தகைய சூழ்நிலை நமக்கும் இல்லையே என்ற ஏக்கமும், அதனால் மனச்சிதறல்களும் பின்னர் தாழ்வு மனப்பான்மையும் அடைகின்றனர்.

பள்ளிக்கூடத்திற்குத் தன்மகனை அனுப்பும் தாய் அவனுக்குத் தூய்மையான சீருடை அணிவித்து, அலங்கரித்து, உடல் வலிமைக்கெனப் பானங்களும் அளித்து அனுப்புவதைத் தொலைக்

காட்சி விளம்பரங்களில் பார்க்கும் சிறுவன் தனக்கு இத்தகைய நிலை இல்லையே என்றும், தன் தாயும் அப்படித் தன்னைச் சீராட்டவில்லையே என்றும் ஒப்பிட்டுத் தன் அமைதியை இழக்கின்றான். அதனால் அவன் மனம் தேவையற்ற நினைவுகளில் ஈடுபடுவதால், அவன் முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது.

இரண்டே நிமிடத்தில் நூடுல்ஸ் தயாரித்துச் சுவையாகச் சாப்பிடும் சிறுவர்களைக் கண்டு, தன் தாயிடமும் இவ்வாறு செய்து தரச் சொல்லும் சிறுவனையும் செய்துதரமுடியாது இருக்கும் தன் வறுமை நிலையை நினைத்து வருந்தும் தாயையும் மிகுதியாக இச் சமுதாயத்தில் காணலாம்.

தொலைக்காட்சிப் பெட்டி என்பது ஆடம்பரப் பொருளாக இருந்த நிலைமாறித் தேவைகளில் ஒன்றாக மாறிவிட்டதால் எளிய குடும்பங்களில்கூட இதனை வாங்கி வைத்துள்ளார்கள். எனவே தான் தாய்க்கும் மகனுக்கும் இத்தகைய தவிப்பு.

பெற்றோர்களுடன் உறவாடும் நேரம் குறைவதால், முன்னொரு காலத்தில் பெற்றோர்கள் குழந்தைகளுக்குச் சொன்ன நீதிக் கதைகளைக் கேட்க முடியாமல் போகிறது. மாறாக, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலேயே மனம் ஒன்றிச் சமுதாய அறஉணர்வு அற்றவர்களாகவும் பெரியார்களோடு உறவாடத் தெரியாதவர்களாகவும் மாறுகின்றனர்.

தொலைக்காட்சியில் வெளியாகும் பல்வேறு விதமான நுகர்பொருள் விளம்பரங்களினால் அவற்றைத் தாங்களும் பயன்படுத்த வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டுத் தேவையில்லாதவற்றையும் வாங்கும் நிலைக்கு ஆளாகின்றனர். இது பெரியவர்களுக்கும் பொருந்தும்.

வீரதீரச் செயல்களை நுகர்பொருள் விற்பனை விளம்பரத்தில் காணும் சிறுவர்கள் அத்தகைய வீரதீரச் செயல்களைத் தாங்களும் நிகழ்த்த விரும்பி உயிரையிழந்த நிலையையும் காணலாம். (Thumps up , Bajaj KB125) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சிறுவர்களை நேர்வழியில் செலுத்துவதைவிட நிகழ்ச்சிகளின் ஆடம்பரத்தில் மயங்கி அதைப்போன்ற வாழ்வுக்காக ஏங்கி வீட்டைவிட்டு வெளியேற

வைக்கும் நிலையினையும் காணமுடிகிறது.

கிராமத்துப் பள்ளிகளில் இன்றைய சூழலில் அதிக மாணவர்கள் சிறப்பாகத் தேர்ச்சி பெறுவதற்கும், விளையாட்டு ஈடுபாடு கொள்வதற்கும் தொலைக்காட்சியே காரணம். ஆனால் கிராமத்துப் பாரம்பரிய விளையாட்டுக்களான கபடி, சிலம்பம், மற்போர் போன்றவற்றிற்குப் பதிலாகக் கிரிக்கெட் இடம் பெறுகிறது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளால் கூட்டு மனப்பான்மை குறைந்து அற உணர்வும் குறைவதைக் காணலாம். வன்முறை, பாலியல், வஞ்சகம் போன்ற காட்சிகளை மீண்டும், மீண்டும் பார்க்கின்ற இவர்கள் மனம் முற்றிலுமாக மாறி அன்பு, மனிதநேயம் அற்றவர்களாகும் அபாயம் உள்ளது. தெருவில் நடக்கும் அநீதிகளை, துயரங்களைக்கூடக் கண்டு கொள்ளாமல் வேடிக்கை பார்த்துச் செல்லும் மனநிலைக்குத் தள்ளப்படுவது இத்தகைய நிகழ்ச்சிகளால்தான்.

பொழுதைப் போக்குவதற்காகத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கத் தொடங்கும் இவர்கள் பின்னர் அதிலேயே மூழ்கி, அதில் தங்களை இழந்துவிடுகின்றனர். இருப்பினும் வில்பர் ஸ்கிராம் (Wilbour Schramn) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளால் ஏற்படும் மிகமுக்கியமான மூன்று பயன்களைப் பின்வருமாறு வகைப்படுத்துகிறார்.

1. வளமான இன்பம் ஏற்படுகிறது. இது பிரச்சனைகளையும் கவலைகளையும் நீக்கப் பயன்படுகிறது.

2. சரியான செய்திகளை அறிவிக்கிறது (எப்படி உடையணிந்து மற்றவர்களுடன் எப்படிப் பழகுவது போன்றவை)

3. சமுதாயப் பொறுப்பை அறிவிக்கிறது (மற்றவர்களுடன் கலந்து உரையாடுகின்ற ஆற்றலையும் சமுதாயப் பிரச்சனைகளை அறிந்து கொண்டு தீர்வுகாண முயலவும் உதவுகிறது.)

குழந்தைகளுக்கான கலை நிகழ்ச்சிகளையோ களிப்பூட்டும் நிகழ்ச்சிகளையோ பெரும்பான்மையான .சிறுவர்கள் பார்க்க

வரும்போது, திரைப்படங்களையும், மகிழ்ச்சியூட்டும் பிற நிகழ்ச்சிகளையுமே பெரிதும் விரும்பிப் பார்க்கின்றனர் என்ற உண்மையையும் இங்கே நினைவில் கொள்ள வேண்டும். முன்குறிப் பிட்ட நிகழ்ச்சிகளின் தயாரிப்புத்தரமும், ஈர்க்கும் தன்மையுள்ளவை களாக அமைந்திருப்பதுமே இந்நிலைக்குக் காரணங்கள் எனலாம்.

வளரும் குழந்தைகள் தங்கள் கல்வியறிவை மேம்படுத்திக் கொள்ள அதிக நூல்களைப் படிக்கவேண்டும். ஆனால், தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் இவர்களைப் பெரிதும் ஈர்த்துவிடுவதால் நூல்களை அதிகமாகப் படிப்பதில்லை. தொலைக்காட்சி நிறையத் தகவல்களை இவர்களுக்கு அளித்தாலும் கூடச் சிந்திக்கின்ற ஆற்றலை இழக்கச் செய்கிறது. அந்நிகழ்ச்சிகள் எவற்றைக் கூறுகின்றனவோ அவற்றை ஒப்புக் கொள்ள வேண்டிய சூழ்நிலையையே உருவாக்கி வருகின்றன.

## பெண்களிடம் ஏற்படுத்தும் தாக்கம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்களில் பெண்கள் இரண்டாம் இடத்தைப் பெறுகிறார்கள். பெண்களை வேலைக்குச் செல்லும் பெண்கள், வீட்டில் இருக்கும் பெண்கள் என இருவகைப் படுத்தலாம். வீட்டிலிருக்கும் பெண்கள் பெரிதும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள். அந்நிகழ்ச்சிகள் இவர்களிடம் பரவலான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. கல்வியறிவுள்ள, அற்ற எந்நிலை மகளிராக இருப்பினும் இவர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் வித்தியாசம் காட்டுவதில்லை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பலதரப்பட்ட நிகழ்ச்சிகளில் பெண்களை ஈர்க்கும் நிகழ்ச்சிகள் பின்வரும் முறையில் வரிசைப் படுத்தப் பெறுகின்றன.

1. திரைப்படப் பாடல்கள், படங்கள், காட்சிகள்
2. சமையல் தொடர்பான நிகழ்ச்சிகள்
3. நாடகங்கள் மற்றும் தொடர் நிகழ்ச்சிகள்
4. மகளிர் அழகுக்கலை, ஒப்பனை, குழந்தை வளர்ப்பு போன்றவை
5. பிற

இந்த வரிசையில் நிகழ்ச்சிகளைப் பெண்கள் பார்க்கிறார்கள். இன்றைய தொலைக்காட்சிகள் பெண்களை ஈர்ப்பதற்காகவே பல்வேறு நிகழ்ச்சிகளை உருவாக்கி அளிக்கின்றன. பெண்கள் ஓய்வாக இருக்கும் பிற்பகல் நேரத்தில் இவர்களுக்கான நிகழ்ச்சிகளை மட்டுமே பல தொலைக்காட்சிகள் ஒளிபரப்புகின்றன.

இத்தகைய நிகழ்ச்சிகள் மூலமாகப் பெரும்பான்மையான பெண்கள் சமையல் கலை மற்றும் அழகுக்கலைகளையே பெரிதும் விரும்புவதையும், தொலைக்காட்சியில் கண்டதற்கு ஏற்பத் தம் செயல்களையும், தம்மையும் மாற்றிக்கொள்ள விரும்புவதையும் காணலாம். பெண்கள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் செய்திகளையோ, அவை சார்ந்த நிகழ்ச்சிகளையோ பெரிதும் விரும்பிப் பார்ப்பதில்லை என்பது ஆய்வுகள் மூலம் தெரிகிறது. குடும்பத்திலுள்ள பிறர் இந்நிகழ்ச்சியைப் பார்க்கும்பொழுது தாங்களும் பார்க்க வேண்டிய சூழலுக்கு ஆளாகும் பெண்களில் பலர் செய்திகளை உள்வாங்கிக் கொள்வதற்குப் பதிலாக, செய்திகளை வாசிக்கும் பெண்களின் அழகு, அணிந்திருக்கும் சேலை, ஆபரணங்கள், செய்திருக்கும் ஒப்பனை போன்றவற்றை விமர்சிப்பதிலேயே கவனமாக இருப்பதையும், அதைப் போன்று தங்களை மாற்றிக்கொள்வதையுமே காணலாம். தமிழ்ச் செய்தி வாசிப்பாளர்கள் மட்டும் இத்தகைய அதீத ஒப்பனையில் வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பெண்களிடையே பின்வரும் செயல் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. நிகழ்ச்சிகளுக்கேற்பத் தங்கள் பணிகளை மாற்றிக் கொள்கிறார்கள். அது சமையலாக இருந்தாலும் அவ்வாறு செய்கிறார்கள். கடைவீதிக்குச் செல்வதாக இருந்தாலும் அவ்வாறு செய்கிறார்கள்.

தங்களுக்குப் பிடித்தமான நிகழ்ச்சிகள் வரும்பொழுது தொலைக்காட்சிப் பெட்டிகள் முன்னர் அமர்ந்துவிடும் பெண்களையே பெரிதும் காணலாம். அவர்கள் ஓய்வெடுக்கும் நேரத்தைக் கூடத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பாதிக்கின்றன. நாளெல்லாம் தமக்காகவும், குழந்தைகளுக்காகவும், கணவனுக்காகவும் உழைக்கும் பெண்கள், பிற்பகல் நேரத்தில் ஓய்வெடுத்து உறங்குவதற்குப் பதிலாக அந்த

நேரத்திலும் தொலைக்காட்சிப் பெட்டி முன்னர் அமர்ந்திருப்பதுதான் உண்மை.

உடல் வளம் பெற உணவு தேவை. அவ்வுணவையும் மெதுவாக, எவ்விதச் சலனத்திற்கும் ஆளாகாமல் உண்ண வேண்டும். ஆனால் இவர்களோ நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டே உண்பதும் அல்லது நிகழ்ச்சிகள் முடிந்த பின்னர் உண்ணலாம் என்று நேரத்தைத் தள்ளிப் போடுவதுதான் பொதுவான உண்மை.

குழந்தைகளோடும், கணவனோடும் வெளியிடங்களுக்குச் செல்வதைக் கூட இத்தகைய நிகழ்ச்சிகள் பாதிக்கின்றன. வெளியிலிருக்கும் போது கூடக் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் நேரத்தில் அவர்கள் மனம் அலைபாய்வதை, நிலை கொள்ளாமல் தவிப்பதைக் காணலாம். இந்நிலை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் வெற்றியை வெளிப்படுத்தினாலும் தங்கள் பணியைத் திறம்படச் செய்ய விடாமல் பெண்களை மாற்றியிருக்கும் தன்மையைத்தான் வெளிப்படுத்துகின்றது.

அனைத்துக்கும் மேலாகக் குடும்பங்களில் கலந்துரையாடும் போக்கும் குறைந்திருப்பதற்கும் தொலைக்காட்சியின் ஆதிக்கமே காரணம். வீட்டிற்கு வரும் விருந்தினர்களோடு கூட மனம் விட்டுத் தொடர்ந்து பேச முடியாமல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஆக்கிரமித்துக் கொள்கின்றன.

இதனால் மாமியார், மருமகள் சண்டை வேண்டுமென்றால் ஓரளவு குறைந்திருக்கிறது என்றாலும், உறவினர்களிடம் ஏற்படும் பிணக்கு அதிகம். எல்லா வீடுகளிலும் அப்படித்தானே இருக்கும்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளால் எளிய நடுத்தரக் குடும்பப் பெண்கள் பெரிதும் பாதிக்கப் படுகிறார்கள் எனலாம். விளம்பரங்களில், நிகழ்ச்சிகளில் வரும் நுகர் பொருட்களைப் பார்த்துத் தாமும் அவற்றை வாங்க வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கிக் கொள்வதும், அதனால் தேவையற்ற பொருட்கள் வீட்டில் சேர்வதும், அதன் விளைவாகப் பொருளாதாரச் சீர்கேடு ஏற்படுவதும் கண்கூடு. (பல வீடுகளில் அடிக்கடி பயன்படாத தேவையற்ற பொருட்கள் அல்லது

அடிக்கடி பயன்படுத்தும் சூழ்நிலை இருந்தும் பயன்படுத்தாத பொருட்கள் நிறைய இருப்பது இதற்குச் சான்று).

பெண்கள் மட்டுமின்றிக் குடும்பத்திலுள்ள அனைவருமே இதற்குக் காரணம் என்பதும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இவ்வனைவரின் மனநிலையையும் ஏதோ ஒரு விதத்தில் மாற்றியிருப்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

தொலைக்காட்சியினால் ஏற்படும் தாக்கங்களைப் பொதுவாகப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். இதனால் ஏற்படும் நன்மைகள்

1. மக்கள் தொகைப் பெருக்கம் ஓரளவுக்குக் கட்டுப் பட்டுள்ளது.

2. சுகாதாரம் பற்றிய உணர்வு ஏற்பட்டுள்ளது. சுற்றுச்சூழலை ஓரளவுக்குச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது.

3. பெரியம்மை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுள்ளது.

4. இளம்பிள்ளை வாத நோய் பற்றிய விழிப்புணர்வு ஏற் பட்டு அதற்கான சொட்டு மருந்து அளிக்கும் நிலை உண்டாகியுள்ளது.

5. எய்ட்ஸ் பற்றிய பயமும், விழிப்புணர்வும் சமுதாயத்தில் பரவியுள்ளது.

6. கல்வி கற்கும் ஆர்வம், அனைத்துத் தரப்பினர் இடையேயும், பெண்கள், முதியோர் உட்பட ஏற்பட் டுள்ளது.

7. குடும்பப் பொருளாதாரச் சுமையில் பங்கு பெறவும். வேலைக்குச் செல்லவும் விரும்பும் பெண்கள் எண்ணிக்கை அதிகமாயிற்று.

8. அரசியல், பொருளாதார, சமுதாயத்தோடு தொடர்புடைய பொதுமக்கள்கருத்து உருவாவதற்குக் காரணமாக அமைகிறது. பொதுமக்களும் தங்கள் பங்கை அளிப்பதற்கான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

9. தம்மைச் சுற்றியுள்ள பல்வகை முன்னேற்றத்தைக் கண்டு தாமும் முன்னேற வேண்டும் என்ற தூண்டுதலை அளிக்கிறது.

10. அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. கிராமத்தில் இருக்கும் கல்வியறிவற்ற ஒருவன் கூட அரசியலைப் பற்றி அறிந்து கொள்ளும் சூழல் உருவாயிற்று.

11. சமுதாயப் பிரச்சினைகளை, சீர்கேடுகளை அறிந்து, அவற்றுக்கான தீர்வுகளைக் காணமுடிகின்றது.

12. ஒரு மாற்றுச் சாதனமாகத் தொலைக்காட்சி பயன்படுகிறது. ஒரு கருத்தை வலியுறுத்தச் செய்யவோ மாற்றி அமைக்கவோ இதன் மூலம் முடிகிறது.

13. பெண் குழந்தைகள் இறப்புவிகிதம் ஓரளவுக்குக் குறைந்துள்ளது.

14. தேர்தல் காலங்களில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

15. 1989 ஆண்டு வெளியான யுனெஸ்கோவின் ஆய்வுரைப்படி முதியோர் கல்வி வளர்ச்சியில் தொலைக்காட்சி அதிக அளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிகிறது.

## எதிர் விளைவுகள்

1. தொலைக்காட்சியில் சித்திரிக்கப்படும் – காட்டப்படும் பெண்களைப் போலச் சமுதாயத்தில் மாற இயலும் பெண்கள் மிகுதியாகியுள்ளனர்.

2. பெண்களைப் போதைப் பொருளாகவும், மலினமான பொருளாகவும் சித்திரித்துக் காட்டுவதால் சமுதாயம் அவர்களைப் பார்க்கும் பார்வையும் அத்தகையதாகவே அமைகிறது.

3. அழகு நிலையங்கள், அழகிப் போட்டிகள் போன்றவற்றால் ஈர்க்கப்படும் பெண்கள். மணமான பெண்கள் உட்படத் தங்களை அழகுப்படுத்திக் கொள்ள அழகு நிலையங்களை நாடுவதும் அதனால் தங்கள் மானத்தையே இழக்கும் சூழலும் உருவாகிறது. (அண்மையில் கேரளாவில் நடந்த சம்பவம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு)

4. மது, புகைபிடித்தல் போன்ற விளம்பரங்கள் இடம்பெறக் கூடாது என்ற விதி இருப்பினும் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் என்ற பெயரில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் மூலம் (கிரிக்கெட், டென்னிஸ்) மறைமுகமாக இத்தகைய விளம்பரங்கள் இடம் பெறுகின்றன. தங்கள் அபிமான விளையாட்டு வீரர்கள் அத்தகைய பொருட் களின் (Wills, Director's Special) பெயர்கள் கொண்ட உடைகளை அணிந்து வருவதைக் காணும் இளைஞர்களும், பிறரும் அவற்றை நாடத் தொடங்குகின்றனர்.

5. தனியார், தொலைக்காட்சிகளில் வரும் மது விளம்பரங்களில் பெண்களும் மது அருந்துவது போல் வெளியாவது பெண்களிடையேயும் ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

6. அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் ஜான் கென்னத் கால்பிரைத் கூறியதைப் போல, தேவையற்ற பொருள்களை வாங்குவதில் பணத்தைச் செலவழிக்க மக்களை விளம்பரங்கள் தூண்டுகின்றன.

7. முதிர்ச்சியற்ற, எளிதில் மயங்கி உணர்ச்சி வயப்படும் பெரும்பான்மையான நுகர்வோரை, கவர்ச்சியான

மனதை ஈர்க்கக் கூடிய விளம்பரங்கள் உடனே கவர்ந்து அவர்களைப் பாழ்படுத்தி வருகின்றன. பிற நிகழ்ச்சிகளும் இதனைத்தான் செய்கின்றன.

8. நிதி நிறுவனங்களின் கவர்ச்சியான விளம்பரங்களும் நிகழ்ச்சிகளும் மக்களிடையே ஏற்படுத்திய தாக்கமும் விளைவுகளும் எல்லோரும் அறிந்த ஒன்றே.

## முடிவுரை

சமுதாய உணர்வுடையோரும் மக்களின் விநோதமான போக்கைப் பார்த்துக் குழப்பம் அடைகின்றனர். வசதி மிக்கவர்களைப் பார்த்து அவர்களைப் போலத் தங்கள் நடத்தைகளை மாற்றிக் கொள்ளும் குழுவினரின் எண்ணிக்கை இப்பொழுது அதிகமாகி யுள்ளது. இத்தகைய நோய் இச்சமுதாயத்தைப் பீடித்திருப்பதற்கு இச் சாதனங்களும் பெரிதும் காரணமாக அமைகின்றன என்கிறார் டாக்டர் ஏ. ஆர. ஹர்திகர்

நேற்றை விட இன்று அறிவால் வளர்ந்து இருக்கிறோம். ஆனால், நம் மனம் கெட்டு விட்டது.

மனக் கோணல்கள் நீங்குமானால், சிறந்த குடிமகனாக முடியும்.

இக்கோணல்களை நீக்கத் தகவல் தொடர்பு சாதனங்கள் துணை புரியுமா? பொறுத்திருந்து பார்க்கலாம்.

சமுதாயத் தாக்கம் என்ற பனிப் பாறையின் நுனியை மட்டும்தான் பார்த்தோம். வெளியில் தெரியும் தாக்கங்களை விட மறைந்து செயல்படும் தாக்கங்களே மிகுதி.

***

# தமிழ் இதழ்கள்

–பேராசிரியர். வீ.கோபால்

நம்நாட்டுச் சுதந்திரப் போராட்டத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தெ.ச.சொக்கலிங்கம் என்பார். இவர் "தமிழ்நாடு", "காந்தி", "தினசரி", "தினமணி" போன்ற பத்திரிகைகளில் தம் எழுத்து மூலம் மக்களுக்குச் சுதந்திர உணர்வை ஊட்டியவர். தம் எழுத்துக்காகச் சிறைத்தண்டனை பெற்றவர். தமிழ்ப்பத்திரிகை உலகில் தமக்கென்று தனி முத்திரை பதித்தவர் தெ.ச. சொக்கலிங்கம். அவரது இதழியல் பணிகளை விளக்கிக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## தெ.ச. சொக்கலிங்கம் பிறப்பு வளர்ப்பு

தென்காசி சங்கரலிங்கனார் மகன் சொக்கலிங்கம், திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் 1899 ஆம் ஆண்டு மே மாதம் 3ம்தேதி பிறந்தார். மளிகைக்கடை நடத்திவந்த சங்கரலிங்கம் பிள்ளையின் 4வது மகனாகப் பிறந்தார். அவரது அண்ணன் டி.எஸ்.சிதம்பரபிள்ளை அக்காலத்தில் திருநெல்வேலி சதி வழக்கில் கலெக்டர் ஆஷ்துரையைக் கொலை செய்ததாகக் கைது செய்யப்பட்டபோது, சொக்கலிங்கம் தமது மளிகைக்கடையை நடத்துவதற்காகப் பள்ளிப்படிப்பை நிறுத்திக் கொண்டார் என்கிறார் மயிலை நாதர். (தினமணி 3.5.96 ப.4 மதுரைப்பதிப்பு) தெ.ச.சொக்கலிங்கம் பெரிய வணிகக் குடும்பத்தில் பிறந்தவர். அவரது (சகோதரர்) குடும்பமே தேசபக்திக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

## தெ.ச. சொக்கலிங்கம் இதழியல் பணிகள்

சொக்கலிங்கம் காந்தி மீதும் காங்கிரசு மீதும் கொண்ட ஈடுபாட்டின் காரணமாகப் பத்திரிகை உலகில் நுழைந்தார். அதனால் தான் "காந்தி" என்ற பெயரிலேயே 1931 ஆம் ஆண்டு பத்திரிகை நடத்தினார். காங்கிரசுக் கட்சியின் பிரச்சாரச் சாதனமாக "தினமணி" யை அக்காலத்தில் முன்நிறுத்தினார். அவர் தீவிரமாக அரசியலில் ஈடுபட்டார்.

சொக்கலிங்கம் அரசியல் எழுத்தில் பாரதியின் விசை, சம்மட்டி அடி வேகம் இரண்டையும் எடுத்துக்கொண்டார். சொக்கலிங்கத்தின் அரசியல் தலையங்க எழுத்தில், எதிர்க்கட்சி ஆடி அவருடைய

வாதத்தை வலியிழக்கச் செய்ய பிளவு, சந்து கிடையாது, என்று கூறுகிறார் பி.எஸ்.ராமையா (மணிக்கொடி காலம் ப.35)

### பத்திரிகை உலகில் தெ.ச.சொக்கலிங்கம்

பத்திரிகைகளின் வாயிலாக மக்களுக்கு எளிய முறையில் தம் கருத்துக்களை வெளிப்படுத்தினார் சொக்கலிங்கனார். முதலில் 1923ல் சேலத்தில் பி. வரதராஜுலு நாயுடு நடத்தி வந்த தமிழ்நாடு இதழில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். 1927ல் அவ்விதழின் ஆசிரியர் பொறுப்பில் அமர்த்தப்பட்டார் என்கிறார் மயிலைநாதர் (தினமணி 3.5.96 ப.4). 1931ல் காலணா இதழான காந்தியில் தொடங்கி அதே ஆண்டில் வந்தேமாதரம் என்ற நாளிதழும் தொடங்கித் தம் எழுத்துக்காகவே 1932ல் ஆறுமாத சிறைத் தண்டனை பெற்றவர் சொக்கலிங்கம்.

தினமணி நாளிதழின் முதல் ஆசிரியராகவே தமிழ்நாடு அவரை அறியும். புதுமைப்பித்தனின் தினமணி எழுத்துக்கள், டி.எஸ்.சி. குத் துணை ஆசிரியராகவே வெளிவந்தன. டி.எஸ்.சியின் வீறுகொண்ட எழுத்துக்கள் 1944ல் அவர் தொடங்கிய "தினசரி" இதழில்தான் வெளிவந்தன. 1940களில் உயிர்ப்பு மிகுந்த தலையங்கங்கள் வெளிவந்த இதழ் தினசரி தான் என்கிறார் பேராசிரியர் தொ.பரமசிவன் (புதிய தேடல், செப்.1998, ப.1).

தெ.ச.சொக்கலிங்கத்திற்குப் பத்திரிகை உலகில் இருந்த தொடர்பை அவர் தொடங்கிய பத்திரிகைகள், அவரது எழுத்துக்கள் பறைசாற்றுகின்றன.

### காந்தி பத்திரிகை உதயம்

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுவுடன் சொக்கலிங்கத்திற்குக் கொள்கை அளவில் மாற்றம் தோன்றியது. எனவே 1931ல் தமிழ்நாடு பத்திரிகையை விட்டு விலகினார். காந்தி என்ற பத்திரிகையைத் தொடங்கினார்.

1932ல் ஜனவரி மாதம் காந்தி கைது செய்யப்பட்டார். ஸ்ரீஇராஜாஜி ஒர் அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு அனுப்பினார். அந்த அறிக்கையை வெளியிட எல்லாப் பத்திரிகைகளும் அஞ்சின. ஸ்ரீமான் சொக்கலிங்கம் பிள்ளை தமது காந்தியில் அதைப் பிரசுரித்துவிட்டு, அன்றிரவு தென்காசிக்குப் பிரயாணமானார். போலீசு அங்குச் சென்று கைது செய்து அவரைச் சென்னைக்கு அழைத்து வந்தனர். எழும்பூர் மாஜிஸ்டிரேட் 6 மாதக் கடினக் காவலும்,

100 ரூபாய் அபராதமும் விதித்தார். ஆறு மாதம் சென்றபின் வெளியே வந்து காந்தி பத்திரிகையை ஆரம்பித்தார். சர்க்கார் ரூ. 500 டிபாசிட் கட்டும்படி கட்டளையிட்டது. 1932ம் ஆண்டு காந்தி பத்திரிகை செம்புதாஸ் தெருவிலிருந்து வெளிவந்தது என்கிறார் ஏ.கே. சந்திரசேகர் முதலியார். (பதிப்பாசிரியர் குழு, திரு. டி.எஸ்.சொக்கலிங்கம், மணிமலர், ப.16–17).

காலணா விலையில் காந்தி பத்திரிகை விற்பனையானது. இது முதலில் வாரப்பத்திரிகையாக வெளிவந்தது. பின்பு வாரமிருமுறை மும்முறையென இப்பத்திரிகை ஓங்கி வளர்ந்தது. அக்காலத்திலேயே 25,000 பிரதிகள் விற்பனையாகியிருக்கின்றன. (மேலது) இதன் மூலம் மக்கள் மத்தியில் காந்தி பத்திரிகைக்கு இருந்த செல்வாக்குத் தெரியவருகிறது.

சொக்கலிங்கனார் நமது நாட்டு மக்கள் மீது கொண்டிருந்த பற்றுக்கு எடுத்துக்காட்டாகக் கீழ்க்கண்ட நிகழ்ச்சியைக் கூறலாம்.

1931ல் பீகாரில் நிலநடுக்கம் ஏற்பட்டு மக்கள் அவதிக்குள்ளானார்கள். அந்தப்பரிதாப நிலையை அரசு கவனிக்கத் தவறியதைச் சொக்கலிங்கம் தம் காந்தியில் வன்மையாக கண்டித்து எழுதினார். "சர்க்கார் எங்கே?" என்று அவர் எழுதிய அந்தத் தலையங்கத்தைப் பார்த்த அரசு, சொக்கலிங்கத்தின் பேரிலும் காந்தி பத்திரிகையின் மீதும் வழக்குத் தொடுத்தது. சொக்கலிங்கம் அவ்வழக்கினை எதிர்த்து வாதாடினார். அவருக்கு வெற்றி கிட்டியது. அந்த வெற்றிக்குப் பிரபல பத்திரிகையான "தாருல் இஸ்லாம்" கூடப்பாராட்டுத் தெரிவித்துத் தலையங்கம் எழுதியது. (லேனா, தமிழ்வாணன், தமிழ்ப்பத்திரிகைத்துறை முன்னோடிகள் ப. 47).

"காந்தி இதழ்"....... நெஞ்சையள்ளும் உருக்கமாக சின்னஞ்சிறு கதைகளும், சிறந்த ஆசிரியக் குறிப்புகளும், எளிய நடையில் சுவையாகச் சொல்லப்பட்டு வெளியாகியது. இது மாதமிருமுறை இதழ். ரூ. 2.50. தனிப்படி 2 அணா. காந்தி இதழ் வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக இயங்கியது என்று எடுத்துக் கூறுகிறார் மா.சு. சம்பந்தன். (தமிழ் இதழியல் வரலாறு ப.82).

காந்தி ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராகச் செயல்பட்டகாரணத்தினால் பல அடக்கு முறைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அதே வேளையில், காந்தி வழியைப் பின்பற்றி, மக்களுக்குச் சுதந்திர உணர்வு ஊட்டும் வகையில் "ஜெயபாரதி" "மணிக்கொடி" ஆகிய வார

இதழ்கள் அதனதன் அளவில் தாக்கம் ஏற்படுத்தின என்று வல்லிக்கண்ணன் தம் இதழியல் நூலில் குறிப்பிட்டுள்ளார். (ப.56).

"காந்தி" சொக்கலிங்கம் என்று சொல்லும் அளவுக்கும் அந்த இதழ் புகழ் பெற்று விளங்கியது. 25 ஆயிரம் படிகள் விற்றன. தமிழ் நாட்டில் தேசியத்தை மக்கள் சொத்தாக்க உதவிய பத்திரிகைகள் வரிசையில் காந்திக்கு ஒரு முக்கிய இடம் உண்டு என்கிறார் இரா. ஆ.பத்மநாபன். தமிழ்நாட்டில் மூலைமுடுக்கெல்லாம் சென்று மக்களுக்குப் புத்துயிர் அளித்தது என்கிறார் பரலி சு. நெல்லையப்பர். அந்தக் காலணாப் பத்திரிகை செய்துள்ள வேலையை நூறு பிரசாரகர்கள் சேர்ந்தாலும் செய்து முடித்திருக்க முடியாது என்கிறார் பா. இராமசாமி. (அ.மா.சாமி, தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி, ப.226).

காந்தி இதழ் பலரது பாராட்டுக்களைப்பெற்றுத் தமிழ் இதழியல் உலகில் நிலையான ஓரிடத்தைப் பிடித்துக்கொண்டது.

**தினமணியில் சொக்கலிங்கம்**

"1932 ஆம் ஆண்டில் தில்லி சட்டசபைத் தேர்தல் நடந்தது. காங்கிரஸ் போட்டியிடுவதாகத் தீர்மானித்தது. காங்கிரசுக்கு ஆதரவாக ஒரு தினப்பத்திரிகையை எப்படியாவது ஆரம்பித்து, எதிர்ப்பை அடக்கிவிட வேண்டுமென்று என்மனம் துடித்தது. அதற்காக அச்சடிப்பதற்கு சீனிவாசனுக்குக் கடிதம் எழுதினேன் அதன் பலனாகச் "சதானந்தே" ஒரு தமிழ்ப்பத்திரிகை ஆரம்பிப்பதென்றும், அதற்கு நான் ஆசிரியராக வருவதென்றும் சீனிவாசன் ஏற்பாடு செய்தார். அந்த ஏற்பாட்டின் படி "தினமணி" உதயமாயிற்று. (மா.சு.சம்பந்தன் தமிழ் இதழியல் சுவடுகள் ப. 140) (டி.எஸ்.சொக்கலிங்கம் எனது முதல் சந்திப்பு ப.90–91).

1934 செப்டம்பரில் "தினமணி" தொடங்கப்பட்டது. நாட்டில் தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்ட நேரம். அதனால் "தினமணி" உடனே காலூன்றி நிலை பெற்றுக் கொண்டது. நாட்டு விடுதலை இயக்கத்திற்கும் காங்கிரசுக்கும் மக்களிடையே வளர்ந்திருந்த செல்வாக்கு "தினமணி"யின் உடனடி வளர்ச்சியில் பளிச்சென்று தெரிந்தது. (பி.எஸ்.ராமையா, மணிக்கொடி காலம் ப. 140).

காங்கிரசு பிரச்சார நாளேடாகத் தொடங்கிய தினமணி, பின்னாளில் (சுதந்திரத்திற்குப் பின்) நடுநிலைய்டன் செய்திகளை வெளியிட்டு, இன்று "வைரவிழா" கொண்டாடிய பெருமையோடு

தலைநிமிர்ந்து நிற்கிறது. தெ.ச.சொக்கலிங்கம் தினமணி நிர்வாகியுடன் தமது சக ஊழியர்களின் நிலையைக் கூறி, அதிக ஊதியம் பெற்றுத்தர முயன்றார். இந்த முயற்சி தோல்விபெறவே, தினமணி அலுவலகத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார்.

பின்னர் 1944ஆம் ஆண்டில் "தினசரி" என்ற பத்திரிகையில் சிறப்போடு பணியாற்றினார் சொக்கலிங்கனார்.

தமிழ்நாட்டிலுள்ள எல்லாப்பத்திரிகைகளும் இராஜாஜி அவர்களின் துரோகத்தை ஆதரித்து எழுதி வந்த காலை, பேராசிரியரின் தினசரி ஒன்றுதான் முகமூடியைக் கிழித்தெறிந்தது. தினசரி ஒன்றுதான் காமராஜ் அவர்களை ஆதரித்தது. போற்றிப் புகழ்ந்தது. அவர் தொண்டையும், குணத்தையும் சிறக்க எழுதியது. காமராஜ் அவர்களுக்கு விரோதமாக எல்லா ஏடுகளும் எழுதியும், தினசரியின் உண்மை முன்பு நிற்க முடியவில்லை. தினசரி உண்மையை உள்ளபடியே மக்களுக்குப் புரியும்படி, பாமரர் மொழியிலேயே எழுதிக்கொள்கைகளை விளக்கி வந்தது. இது மக்களுக்குச் செய்த சேவை மட்டுமன்று, தமிழுக்கும் செய்த சேவையாகும். (டிஜி. ஏகாம்பரம், பேனா மன்னர் சொக்கலிங்கம், ப.62).

இந்நிலையில் அறிஞர் சொக்கலிங்கம் அவர்கள் தமிழ்நாட்டிலும் தாய்மொழியிலும் சிறந்த பற்றுடையவராய்த் திகழ்ந்தார். அவர் கலையின் தெளிவும் கட்டுரை வன்மையும் வாய்ந்தவர் என்று சொல்லின் செல்வர் ரா.பி.சேதுபிள்ளை மெத்தப்பொருத்தமாகவே புகழாரம் சூட்டியுள்ளார். அத்தகைய தமிழ் உணர்வு பெற்றதற்கு மகாகவி பாரதியே காரணம் என்று விளக்குகிறார் மயிலை நாதர் (தினமணி, 3.5.96, ப.4). அவரது கூற்றே பத்திரிகையாளர் தெ.ச. சொக்கலிங்கத்தின் இதழியல் பணிக்குப் பொருத்தமாக அமைகிறது.

தமிழ் பத்திரிகைகளின் வரலாற்றை வரைந்த "சோமலெ" தினமணியின் முதல் ஆசிரியர் டி.எஸ் சொக்கலிங்கம் அவர்களைப் பற்றி எழுதும்போது, பத்திரிகை உலகில் அவர் கண்ட களங்கள் பல, கொண்ட வெற்றிகள் ஏராளம். அவருடைய வாழ்க்கை வரலாறு தமிழ்ப்பத்திரிகை உலகின் வரலாறாகும் என்று எழுதுகிறார் மாலன். (தினமணி வைரவிழா மலரில் ப.16) இந்நிலையில் தெ.ச. சொக்கலிங்கனார் இதழ்ப்பணிகள் அமைகின்றன. இவ்வகையில் தமிழ் இதழியல் வரலாற்றில் செக்கலிங்கனார் நீங்கா இடம்பெற்றுவிட்டார்.

❋❋❋

# பதிற்றுப் பத்தின் சொற்கொடை

–பேரறிஞர். அ. மா. பரிமணம்.

## 2. ஆறியம்

ஆறியம் என்னும் சொல், பதிற்றுப் பத்தின் இரு பாடல்களில் மட்டுமே இடம்பெறும் சொல்லாகும். பிற சங்கத் தொகை நூல்களுள்ளும் பத்துப்பாட்டிலும் இச்சொல் காணப்படாமையின், பதிற்றுப் பத்து காத்து வழங்கும் பழஞ்சொற்களுள் இஃதும் ஒன்றாகும். இந்நூலின் மூன்றாம் பத்தினால், பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாடும் பாலைக் கௌதமனார் தமது நான்காம் பாடலில்,

"வறிது வடக்கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி
பயங்கெழுபொழுதோடு ஆறியம் நிற்ப என்றும் (பதி. 24–25)"

ஏழாம் பத்தினால், செல்வக் கடுங்கோவாழியாதனைப் பாடும் கபிலர் தமது ஒன்பதாம் பாடலில் "பயங்கெழு வெள்ளி ஆறியம் நிற்ப" என்றும் (பதி 69–14) இச்சொல்லினைப் பயன்படுத்தியுள்ளனர். இரு புலவர்களும் பார்ப்பன மரபுசார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பதிற்றுப்பத்தின் இப்பகுதிகட்கு உரைவரைந்த உரையாசிரியர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்.

1. பதிற்றுப் பத்தின் பழைய உரையாசிரியர். "சிறிது வடக்கிறைஞ்சின புகழான் அமைந்த வெள்ளி மழைக்குப் பயன்படும் மற்றைக் கோட்களுடனே தான் நிற்கும் நாளிலே நிற்க". "வெள்ளி என்றது வறிது வடக்கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி என்றவாறு. பயம்கெழு ஆறியம் நிற்க வென்றது அவ்வெள்ளி மழைக்கு உடலான மற்றை நாள் கோள்களுக்குச் செல்லுகின்ற நல்ல நாட்களிலே நிற்க என்றவாறு".
2. டாக்டர் உ.வே.சா. குறிப்புரை – "வடக்குத் திசையின் கண்ணே தாழ்ந்த சிறப்புச்சான்ற வெள்ளி என்னும் கோள் பயன்பொருந்திய மற்றைக் கோள்களோடு தனக்குரிய நல்ல நாளிலே நிற்க". "உலகத்திற்குப் பயன் பொருந்திய சுக்கிரன் என்னும் கோள் மழைக்குக் காரணமான மற்ற நாள்கோள்களுக்குச் செல்கின்ற நல்ல நாட்களிலே நிற்க".
3. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை – "வடதிசைக்கண்

சிறிதேசாய்ந்து தோன்றும் சிறப்பமைந்த வெள்ளியாகிய கோள், பயன் பொருந்திய ஏனை நாண்மீன்களுடனே தனக்குரிய நாளிலே நிற்க" "உலகிற்கு நல்ல பயனைச்செய்யும் வெள்ளி என்னும் கோள் மழைக்குக் காரணமாகிய ஏனை நாட் கோள்களுடனே சென்று நிற்ப".

4. பண்டிதர் சு. அருளம்பலவனார் – "சிறிது வடதிசைக்கண் தாழ்ந்த புகழமைந்த வெள்ளி மழைக்குப் பயன்படும் மற்றைக்கோள்களுடனே தான் நிற்கும் நாளிலே நிற்க. ஆநியம் – நாள். நாள் சுவாதி முதலியன. பயங்கெழுபொழுது – மழைக்குப் பயன்படும் புதன், சனி, செவ்வாய் என்னும் கோள்கள். சிறிது வடக்கிறைஞ்சிய வெள்ளி மழைக்குப் பயன்படும் மற்றைக் கோள்களுடனே தான் நிற்கும் நாளிலே நிற்க".

5. இராவ் சாகிபு மு. இராகவையங்கார் – சுக்கிரன் என்றகோள் நல்ல நாட்களிலே நிற்கவும்.

கூறப்படும் பொருளில் பெரிய வேறுபாடில்லாமலும், பெரும்பாலும் ஒத்துச் செல்லும் வகையிலும் உரையாசிரியர்களால் உரைவரைந்து காட்டப்படும் இச்சொல்லின் இயல்பினைச் சிந்திக்குமுன், தமிழ் நிகண்டுகளும் அகராதிகளும் இச்சொற்பொருளை எங்ஙனம் குறிப்பிட்டுள்ளன என்று காண்பது பயனுடையதாகும்.

## நிகண்டுகள் கூறுவன

1. திவாகரம் – ஆனியம் = பருவம், நாள், இருது

   ஆனியம் (ஆநியம்) இருதுப் பருவம் ஆகும் (142)

   "பகலும் வைகலும் திவசமும் தினமும்
   ஆனியமும் திவாவும் நாளாகும்மே (118)

2. பிங்கலம்

   ஆனியம் – இருது, பருவம்.

3. சூடாமணி – இருது, பருவம்

4. கயாதரம் – பருவம், இருது

5. நாம தீப நிகண்டு – நாள் (553), பெரும்போது, இருது, பருவம் (557)

அகராதிகள்

1. சென்னை பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon)

*1.* Solar Day from Sunrise to Sunrise : நாள் (பிங்)

2. Lunar day நட்சத்திரம் (பயங்கெழுவெள்ளி ஆனியம் நிற்ப) (பதி 69-14)

3. Season - பருவம் (சூடா)

4. Daily Allowance ; batta - நாட்படி (காட்டி ஆனியம் பெறுவதாகவும் (Inse)

2. V.P. Visvanatha PIllai அகராதி மூலநாள் (The Nineteenth Lunar Mansion)

*3.* Winslow அகராதி – மூலநாள்

4. தமிழ்ப்பல்கலைக்கழகப் பெருஞ்சொல்லகராதி

1. நல்லநாள் பயங்கெழுவெள்ளி ஆநியம் நிற்ப (பதி 69-14)
2. மூலநாள் (சதுரகராதி பக் 16)
3. பொழுது, பருவம் – (சதுரகராதி)

5. இலக்கியச்சொல்லகராதி – சுன்னாகம் குமாரசாமிப் பிள்ளை

பகல் – நாள்

நாள், நல்ல நாள், தான் நிற்கும் நாள் என்றிங்ஙனம் வரையப் பட்ட உரைகளை நோக்குங்கால், அவையெல்லாம் பெரும்பாலும், நிகண்டுகளில் கொடுக்கப்பட்ட பெயர்களை அடிப்படையாகக் கொண்டு வெள்ளிக் கோள் நிற்கும் ஒரு கால விசேடம் என்னும் கருத்தில் எழுதப்பட்டனவாகவே காணப்படுகின்றன. மேற்கோள்காட் டிய அகராதிகளும் பதிற்றுப் பத்தில் இடம்பெறும் இடத்தையே குறிப்பிட்டுள்ளன. டாக்டர் உ.வே.சா., ஔவை துரைசாமிப்பிள்ளை, அருளம்பலவனார் போன்ற உரையாசிரியர்களும் வேறு இடங்களை மேற்கோள் காட்டாமையால் ஆநியம் என்னும் சொல் பிற்றை நாள் இலக்கியங்களில் இடம்பெறவில்லை போலும் என எண்ணத்தோன்றுகிறது.

மழை பெய்தல் பெய்யாமைக்கு உதவியாகும் வெள்ளிக்கோள், பெய்யவும் பெய்யாது போகவுமான அறிகுறியாய்ப் பிற நாள் கோள்களோடு நிற்றற்குரிய காலத்தை உணர்த்தும் ஒரு வானியற்கலைச்சொல்லாக ஆநியம் இருந்து வந்துள்ளதனை

உளங்கொண்ட பாலைக் கௌதமனாரும் கபிலரும் அச்சொல்லை ஏற்ற இடம் அறிந்து பயன்படுத்தி உள்ளனர் என்பது தெரிகிறது.

அச்சொல்லின் இயல்பினை மேலும் சிந்திக்குமுன்னர் வெள்ளிக்கோள் பற்றிச் சிறிது நினைவு கூர்வது தக்கதாகும். அந்தரத்து அகிலகோடி தாழாது இயங்கி நிற்கும் வான்வெளியில் நாம் காணும் ஞாயிற்றினை மையமாகக் கொண்டியங்கும் பூமிக்கிரகம் சார்ந்து இயங்கும் எண்ணற்ற விண்ணியங்கு மீன்களும் நவக்கோள்களும், இருபத்தேழு உடுக்குலங்களும் சிறப்பு வாய்ந்தனவாகும். அவற்றின் இயக்கங்களால் பூமிக் கோளிலுள்ள இயங்கியல் நிலையியற் (சர—அசர) பொருட்களனைத்தும் தாக்கப்பெறுகின்றன. அவற்றின் இயக்கங்களையும் இயல்புகளையும் வானியல் ஆய்வாளர்களும், ஆசிரியர்களும் அவைபற்றிக் கதை புனைவதில் சளைக்காமல் ஈடுபட்டுள்ளனர். நவக்கோள்களுள் வெள்ளி என்னும் சுக்கிரன் (Venus) பூமியில் மழை பெய்வதற்கு உதவியாக அமைவது கண்டு அதனை மழைக்கோள் என்றும் நற்கோள் என்றும் குறிப்பிட்டுள்ளனர். பிற உடுக்களின் வேறுபட்டு மிக்க ஒளியோடு, பொதுவாகக் கதிரவன் உதயமாவதற்கு முன்னர் கீழ் வானில் வெள்ளொளி வீசித்திகழ்வதால் வெள்ளி, வெண்மீன் எனவும் அது கூறப்பட்டது.

ஞாயிறு, திங்கள், நவக்கோள்கள், விண்மீன்கள், பூமிக்கிரகம் போன்றவற்றின் இயல்புகளையும் இயக்கங்களையும் உணர்ந்து, அவற்றின் விளைவுகளை அறிந்து தம் வாழ்க்கையைத் தக்கவாறு அமைத்துக்கொண்டவர்களும் தொன்மையான நாகரீகமுடையவர்களுமான எகுபதியர், உரோமர், ஆரியர் போன்றோர்களின் வானியல் அறிவினுக்கு எவ்வகையானும் குறைவுபடாத அறிவுப் பெருமையுடையவர்கள் பண்டைத் தமிழராவர். குணதிசைக்கண்ணே விடியலில் ஒளி வீசித்திகழும் வெள்ளிக்கோள் தான் தோன்றவேண்டிய நேர்கிழக்கிலன்றிச் சற்றே வடதிசைக்கண் சாய்ந்து உலவி, பிற உடுக்களோடு தோன்றுமாயின் (ஆநியம் நிற்குமாயின்) அது நல்ல மழை பெய்வதற்கான முன்னறிவிப்பாகுமென்றும் தமிழ் நாட்டில் வற்கடம் தோன்றற்காம் முன்னறிவிப்பாகுமென்றும் தமிழ்மக்கள் உணர்ந்திருந்தனர். இது. பலமுறை உணர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பிக்கையாதலின், வானியல் சார்ந்த அறிவியல் அடிப்படையிலான நம்பிக்கையாதலின் பொய்படுவதில்லை. வெள்ளிக்கோள் தன்நிலையின் மாறித் தெற்குப் புறம் சென்றால் மழை பெய்யாது என்னும் உண்மையை,

வசையில் வண்புகழ் வயங்கு வெண்மீன்

திசை திரிந்து தெற்கு ஏகினும் (பட்டினப் 1–2) என்று கடியலூர் உருந்திரங் கண்ணனாரும்,

தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும் (புறம் 117:2) என்று கபிலரும்,

இலங்குகதிர் வெள்ளி தென் புலம்படரினும் (புறம் 35:7) என்று வெள்ளைக்குடிநாகனாரும் புலப்படுத்தியுள்ளனர்.

இவ்வகையிலமைந்த ஆநியம் (ஆனியம்) என்னும் வானியற் கலைச் சொல்லின் பிறப்பு எண்ணிப்பார்த்தற்குரியது. எல்லாச்சொல்லும் பொருள் குறித்தன என்று கூறப்பட்டாலும், எதனால் அச்சொல் அப்பொருளைச் சுட்டுதற்கு ஏற்றதாயிற்று என்று அறிவது அல்லது அச்சொல்லின் வேர் எதுவாகும் என்று அறிவது, பல்லாயிரக்கணக்கான ஆண்டுப் பழமையால் அத்துணை எளியதன்று. எனினும் தமிழ்ச்சொற்களின் சொற்பிறப்பியலை அறிந்துணர்ந்து முற்படும் ஆய்வாளர் சிலரது முயற்சி போற்றற்கூடியதே. சிற்சிலவிடங்களில் "மொழிப்பொருட்காரணம் விழிப்பத்தோன்றா" என்னும் தொல்காப்பிய அமைதியைப் புறகணித்துத் தங்கள் ஆர்வமும் ஊகமுமே துணையாக் கொண்டு ஆராயமுற்பட்டோருமுளர். அவர்களை இருவகைப் படுத்தலாம்.

1. நேராகவோ ஆங்கில வழியாகவோ தாம்பெற்ற நிரம்பா வடமொழிப்புலமையால், பல தமிழ்ச்சொற்களின் மூலம் வடமொழியாகவே இருத்தல் வேண்டும் என்னும் அடிப்படையில் ஆய்பவர். தமிழ் போலும் பிறமொழிகளுக்குச் சொற்கொடை வழங்கும் தகுதியும் உரிமையும் கொண்டது வடமொழியே என்பது இவரது எண்ணம்.

2. எந்தத் தமிழ்ச் சொல்லையும் வடமொழிச் சார்பினதாகக் காட்டும் இயல்பினருக்கு மாறாக, அவர்கட்குப் பதிலிறுக்கும் வகையில், எந்தச் சொல்லுக்கும் தமிழ்வழியாகவே மூலங்காணும் முயற்சியிலீடுபட்டவர்கள். இவ்விருசாரருமே, பல சமயங்களில், அண்ணாமலையானின் அடிமுடிதேடி அலுத்தாரை ஒத்தவராயினர்.

ஆநியம் பற்றி வினவியபோது முதல் வகையாயினர், மத்தியானம் என வழக்கில் இடம்பெறும் சொல்லின் திரியாதவடிவத்தில் இடம்பெறும் ஆனியகம் என்னும் வடசொல் வழிவந்ததாகலாம் என்று கூறினர். அச்சொல் மதிய நேரத்தில் நடைபெறு சடங்கின் செயல்களைக்

குறிக்கும் என்றனர். தமிழ்வழிச் சொற்பிறப்பாய்வாளரை நாடியபோது அவர்கள் "மழை பெய்தற்கு ஆக்கமாகும் நாள்மீன் பகுதியுள் அமைந்திருத்தல் என்பது இச்சொல்லின் பொருள். ஆநியம் என்பது ஆகும் நியமம் என்னும் இரு சொற்கள் பிணைந்ததொரு ஆக்கச்சொல். ஆகும் என்பது ஆம் எனவும், நியமம் என்பது நியம் என்றும் குறைந்து இணைந்தது. ஆமின் மகரம் மேல் வரும் நகரம் நோக்கிக் கெட்டது", என்று விளக்கினார்கள்.

இருவகையினர் கருத்துக்களுமே, ஆநியச் சொல்லின் பிறப்பினை ஐயமின்றி நிறுவிவிட்டதாகக் கொள்ளுமாறில்லை. இருகருத்துக்களிலும் வேற்று மொழியின் இடையீடு காணப்படுகின்றது. அந்த வேற்று மொழி வடமொழியாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. பிராகிருதம், பாலி போன்றவையாகவும் இருக்கலாம். அன்றி நல்ல தமிழ்மூலமாகவும் (வேராகவும்) இருத்தல் கூடும். மறுக்க முடியாத சான்றுகளால் உறுதி செய்யப்படும் வரை, மூலம் நாடி உழலாமல் ஆநியம் என்பது வெள்ளி என்னும் மழைக்கோள் மழை பெய்வதற்கு உதவியாகும் வகையில் நிற்றலைக் குறிப்பிடும் ஒரு வானியற்கலைச்சொல் என்றும், குறைந்தது இரண்டாயிரம் ஆண்டு கட்கு முற்பட்ட தொன்மை சான்றது என்றும் கொண்டு போற்றுவது தக்கதாகும்.

அந்தச்சொல்லைப் பிற்றை நாட் புலவர்கள் தங்கள் படைப்பில் ஏற்றுப் போற்றவில்லை போல் தெரிகின்றதே என்பார்க்குப் பின்வருமாறு விளக்கம் தரலாம். ஒரு சொல் உள்ளமையால் அதனைப் பயன்படுத்தல் வேண்டும் என்றில்லாமல், அந்தச்சொல்லைப் பயன்படுத்தும் தேவை உள்ளமையால் பயன்படுத்துவது என்பது தான் சிறந்த கவிஞர்க்குரிய இயல்புகளுள் ஒன்றாகும். நாள்படி (Daily allowance) என்னும் பொருளில் இடைக்காலக் கல்வெட்டுத் தமிழில் இச்சொல் பயன்படுத்தப்பட்டிருப்பது கொண்டும் இவ்வுண்மையைத் தெளியலாம். பழந்தமிழ் மக்களின் வானியற் புலமையைப் புலப்படுத்தும் ஒரு வானியற்கலைச்சொல்லைக் (ஆநியம்) காத்துத் தந்த பெருமை பதிற்றுப் பத்தினைச்சாரும்.

※ ※ ※

# பதிற்றுப்பத்தின் சொற்கொடை

—பேரறிஞர். அ. மா. பரிமணம்.

## 3. – குடைச்சூல்

பதிற்றுப்பத்தின் ஈரிடங்களில் குடைச்சூல் என்னுஞ்சொல் இடம்பெற்றுள்ளது. ஆரம்பத்தில் காக்கைபாடினியாரால், 'வளம்கெழு குடைச்சூல் அடங்கிய கொள்கை' (57–11) என்றும், ஏழாம்பத்தில் ஆளப்பெற்ற இச்சொல் மகளிர் காலணிகளுள் ஒன்றாகிய சிலம்பினையே குறிக்கின்றது. இந்நூலின் பழைய உரையாசிரியர், 'குடைச்சூல்–சிலம்பு' என்று பொருள் கூறியுள்ளார். குறிப்புரை வரைந்த உ.வே.சா. அவர்கள் 'வள்ம் கெழுகுடைச்சூல்' என்பதற்கு, 'தொழில் வளம் பொருந்திய சிலம்பு' என்று கூறி, இளங்கோவின் சிலம்பில் இடம்பெறும் இச்சொல்லிற்கு அந்நூலின் குறிப்புரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் தந்துள்ள விளக்கத்தை மேற்கோள் காட்டியுள்ளார். இவருரையில் தொழில் வளம் பொருந்திய என்பது சிலம்பு உருவாக்கப்பட்ட நிலையில் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள தொழில் மாட்சியினைக் குறிக்கின்றது. விளக்கவுரையாசிரியர் ஔவை துரைசாமி அவர்கள், இவ்வுரையே கூறிப் "புடைப்பட்டு உட்கருவை உடைத்தாதல் பற்றிச் சிலம்பு குடைச்சூல் எனப்பட்டது" என்னும் விளக்கம் தந்து சிலப்பதிகார உரையாளர் கருத்தினையும் குறிப்பிட்டுள்ளார். ஆய்வுரை ஆசிரியராகிய அருளம்பலவனார், ஏறக்குறைய இதே பாங்கில் பொருளும் விளக்கமும் தந்துள்ளதோடு, குடைச்சூலை உடைய சிலம்பைக் 'குடைச்சூல்' என்றார், என்றொரு விளக்கமும் தந்துள்ளார். இதனால் குடைச்சூல் என்னும் சொல் ஆகுபெயர் வகையால் சிலம்பினைக் குறிக்கின்றது என்பதையும், அச்சொல் சிலம்பின் அமைப்பியல்பினைச் சுட்டி அக்காரணத்தால் சிலம்பிற்கு ஆயிற்று என்பதையும் புலப்படுத்தியுள்ளார். பிறரைப் போலச் சிலப்பதிகார உரைப்பகுதிகளோடு, மூலப் பகுதியையும் கொடுத்துள்ளார்.

மகளிரணியும் சிலம்பு என்னும் காலணி அவர்கள் வாழ்க்கையில் சிறப்பிடம் பெற்றதாக உள்ளது. காலணிகளுள் பிறிதொன்று காப்பு எனப்படும். அது, பயன்படுத்துவோர் செல்வநிலைக்கேற்ப வெள்ளி முதலிய உலோகத்தால் பொருத்துவாயோடு வட்டமாகவும் கெட்டியாகவும் அமைக்கப்படும்.

அங்ஙனமின்றிச் சிலம்பு, அத்தகு உலோகத்தால் குழாய் போல உட்டுளை கொண்டதாய், வளைந்த நீள்வட்ட வடிவில், பொருத்துவாய் அமைந்ததாய்ச் செய்யப்படும்.

அதனால் சிலம்பு காலில் அணியும்போது பாதத்தின் மேற்பகுதியில் நன்கு பதிந்து பொருந்திக்கிடக்கும். சிலம்பினுள்ளே பரற்கற்கள் இடப்படுதலால் அணிந்த மகளிர் நடக்கும்போது, மெல்லிய இனிய ஓசை உண்டாகும். அவ்வோசை நுட்பத்தால், சிலம்பணிந்து வருவோர் இன்னாரென்பதனையும் அறிந்து கொள்ள இயலும்.

பிறந்த குழவி சிறுமியராய், கன்னியாய் இருக்கும் வரை காலில் சிலம்பணியலாம் என்பதும், மணங்கொள்ளுமுன்னர் அச்சிலம்பு அகற்றப்படும் என்பதும், அவ்வாறகற்றும் நிகழ்வு மணமுன் நிகழும் கரணம் (சடங்கு) ஆகுமென்பதும் சங்கநூல்களால் அறியப்படும். அதனைச் 'சிலம்பு கழி நோன்பு' என்பர். சிலம்பு அகற்றப்பட்டு மணவினை நிகழ்ந்த பின் அச்சிலம்பு, மணந்துகொண்ட இல்லறத்தலைவியின் உடைமையாய் அவள் பொறுப்பில் பாதுகாக்கப்படும் என்பதும் இலக்கியங்களால் அறியப்படுகின்றது. தனிமனையறம் புக்க கண்ணகி கோவலனது பரத்தைமை வாழ்வால் தன் அணிகலன்களை இழக்க நேர்கிறது. அந்நிலையில், "வான்பொருட் குன்றம் தொலைத்த இலப்பாடு நாணுத்தரும்", என்று கூறிய கோவலனிடம், "சிலம்பு கொண்ம்" என்று கண்ணகி சிலம்புகளைக் கொடுக்கின்றாள். அச்சிலம்பு காலில் அணிந்திருந்தால் முன்னரே கொடுத்து இழக்கப்பட்டிருக்கும். இதனால் மணத்திற்குப்பின் பெண்கள் சிலம்பணியாமையை உணரலாம். எனினும் இவ்வழக்கம் சங்ககாலத்திலேயே புறக்கணிக்கப்பட்டு மணத்திற்குப் பின்னரும் மக்களைப் பெற்ற பின்னரும்கூட மகளிர் சிலம்பணிந்தமையினை அக்கால இலக்கியங்கள் காட்டுகின்றன. இந்த உண்மையை,

"இளந்துணைப் புதல்வர் நல்வளம் பயந்த

வளங்கெழு குடைச்சூல் அடங்கிய கொள்கை

ஆன்ற அறிவிற் றோன்றிய நல்லிசை

ஒண்ணுதல் மகளிர்..." என வரும் பதிற்றுப்பத்தின் பாடற்பகுதி (பதி 57, 10–14) கொண்டறியலாம்.

சிலம்பு என்னும் வினையடியாகப் பிறந்த இச்சொல் மலை, மலைப்பக்கம், குகை, மகளிர் காலணி எனப் பல் பொருள் கொண்டதாகும். அனைத்தும் ஒலித்தல் என்னும் தொழிலடிப்படையில் தோன்றிய சொற்களாகும். இப்பலபொருளிலும் அமையுமாறு சங்கப்பாடல்களில் இச்சொல் ஆளப்பெற்றுள்ளது. காலணியைக் குறிக்கும் நெகிழம் என்றொரு சொல்லும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது. (பரி. 21–18, கலி 90–11, சிலம்பு 18–25) சிலம்பின் பரியாயப் பெயர்களாகிய) நெகிழத்தையும் ஞெகிழியையும் குறிப்பிடும் திவாகரம் பிங்கலந்தை முதலிய பழமையான நிகண்டுகள் ஏனோ குடைச்சூல் என்பதனைக் குறிக்காமல் விட்டுவிட்டன.

குடைச்சூல் எனப்படும் சிலம்பு, புடைதிரண்டிருப்பதும், உட்புழைகொண்டிருப்பதும், அதனுள் அரிகள் (பரல்கள்) இடப்பெற்றிருப்பதும் இன்றியமையாத இயல்புகளாகும். அச்சிலம்புகள் பொன்னால் அமைக்கப்படுதலும், சிலம்பின் புறத்தே அழகிய அரும்புத் தொழிற்பாடு அமைக்கப்படுதலும், வயிரம் மாணிக்கம் போலும் அரிய மணிகள் பதிக்கப்பட்டிருப்பதும், அச்சிலம்பினை உடையாரின் செல்வவளத்திற்கு ஏற்ப அமையும். பிறரால் காணப்படாது, உள் நின்று உருளுவதால் ஒலி செய்யமட்டுமாக இடப்படும் அரிகளும் கூட அதனை உடையாரின் செல்வநிலையை உணர்த்துவதாக அமையக் காண்கிறோம். சோணாட்டு வணிகப் பெருங்குடி மரபில் வந்த மாநாய்–கன் தன் மகளுக்குச் செய்தணிந்த சிலம்பு மணிகளைப் பரல்களாகக் கொண்டிருந்தமையும், பாண்டிநாட்டு வேந்தன் தன் மனைவிக்குச் செய்தணிந்த சிலம்பு முத்துக்களைப் பரல்கலாகக் கொண்டிருந்தமையும் இதற்குச் சான்றாகும்.

சேர வேந்தர்களின் வீர, ஈரப்பண்பாட்டு மாட்சியினை விளக்கும் பதிற்றுப்பத்து, பேணிக்காத்தளித்த குடைச்சூல் என்னும் சொல்லினை அதே சேரவேந்தர் மரபில் தோன்றிச் சிந்தையள்ளும் சிலப்பதிகாரத்தைப் படைத்த இளங்கோவடிகள் அதன் பொருளும் சிறப்பும் புலப்படுமாறு சிலம்பில் காட்டியுள்ள பகுதியும், அதனை அடியார்க்கு நல்லார் விளக்கியுள்ள பாங்கும் சிறப்பாகவுள்ளன. தான் அரசிளங்கோவாகச் சேர அரண்மனையில் வளர்ந்தபோது, அரசமாதேவியர்களின், சிலம்புகளைப் பார்க்கும் வாய்ப்பு அவருக்குச் சொற்சித்திரமாகச் சிலம்பினை உருவாக்கப் பெரிதும் உதவியாக அமைந்திருக்கும். அப்பகுதியும் உரையும் வருமாறு:-

"மத்தக மணியொடு வயிரம் கட் டிய
பத்திக் கேவணப் பசும்பொற் குடைச்சூற்
சித்திரச் சிலம்பு" (சிலப்பதிகாரம் 16, 117-9)

தலையான மாணிக்கத்தோடு வயிரமும் பத்திபட அழுந்திய கேவணத்தையுடைய, கிளிச்சிறை என்னும் பொன்னாற்செய்த புடைபட்டு உட்கருவை உடைய, சித்திரத் தொழிலுடைத்தாகிய சிலம்பு (மேலது. அடியார்க்கு நல்லார் உரை) கேவணம் - மணி அழுத்தும் குழி.

இவற்றால் குடைச்சூல் என்பதன் பொருளும், அது சிலம்பிற்குப் பெயராகிய பாங்கும் உணரலாம். வயிரத்தையோ, முத்தினையோ பரல்களாகக் கொண்டமையும் சிலம்பினைப் பார்த்து மகிழும் வாய்ப்புக் கிட்டாது போயினும், அத்தகு குடைச்சூலைப் படித்து மகிழும் வாய்ப்பு, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம் ஆகிய பனுவல்களால் கிடைத்துள்ளமை இன்பூட்டுவதாக உள்ளது.

* * *

## நன்றி அறிவித்தல்

முத்தமிழ்க் கல்லூரி முன்னாள் முதல்வர் திரு. துரைராஜ் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு 150 அரிய தமிழ் நூல்களை அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார். அன்னாருக்கு தமிழ்ச் சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

# பதிற்றுப்பத்தின் சொற்கோடை

–பேரறிஞர். அ. மா. பரிமணம்.

## 4 - உன்னத்துப்பகைவன்

பதிற்றுப்பத்தின் பத்துக்கள் அனைத்தும், இயல்பாகவே படை வீரமும் கொடை வீரமும் மிக்கு விளங்கிய பண்டைச் சேரர் குடியில் வந்த இரு மரபுகளைச் சார்ந்த பத்து வேந்தர்களைப் பாடாண்டிணையில் அமைத்துச் சிறப்பிக்கும் பாங்கில் பாடப்பட்டனவாகலின், அவ் வேந்தர் தம் கொடை, வீரப் பண்புகளை எவ்வாறெல்லாம் விளக்க முடியுமோ அவ்வாறெல்லாம் அந்நூற் புலவர்கள் விளக்கியுள்ளனர். அதன் ஏழாம்பத்தில் செல்வக்கடுங்கோ வாழியாதனைச் சிறப்பிக்கும் கபிலர், அவன் பாரிவேளின் பண்பு நலன்களோடு ஒத்து விளங்குவதனை உணர்ந்து பாடுங்கால், பாரியின் பெரு வீரத்தை நினைந்து அம் மன்னனை "உன்னத்துப்பகைவன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

உன்னம் என்பது கருத்து, தியானம், உன்னமரம் , அன்னப்பறவை வகை, நாட்டியக் கைமுத்திரை வகை என்று பல பொருளில் வழங்கும் ஒரு சொல்லாகும். சங்க இலக்கியத்துள் இச்சொல் உன்ன மரம் (புறம்3:23 பதிற் 23-1; 40-17;61-6) என்னும் பொருளிலும், கருத்து (அகம்.65-1) என்னும் பொருளிலும் வழங்கப்பெற்றுள்ளது. "ஊர்கள் இல்லாதனவும் வருத்தம் மிக்கனவும், ஆறலை மாக்கள் வருவோரை எதிர்பார்த்திருப்பனவும், அவர்களுள் அம்பு பட்டு இறந்தவர்களின்உடல் மூடிய கற்பதுக்கை மேலே பருந்துகள் இருந்து வருந்துவனவும் உன்ன மரத்தினை உடையனவுமாகிய அரிய வழிகள்' என்று புறநானூறு கூறும்பகுதி வருமாறு:-

"ஊரில்ல உயவரிய
நீரில்ல நீளிடைய
பார்வல் இருக்கைக் கவிகண் நோக்கின்
செந்தொடை பிழையா வன்கண் ஆடவர்
அம்பு விட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
திருந்து சிறை வளைவாய்ப் பருந்திருந்து உயவும்
உன்ன மரத்த துன்னருங்கவலை" (புறம் 3:17-23)

இதனால் உன்னமரம் பாலை நிலத்துக்குரியது என்பதனை உணரலாம். மேலும் இதனை,

"அலந்தலை உன்னத்து அங்கவடுபொருந்திச்
சிதடி கரையப் பெருவறம் கூர்ந்து
நிலம்பைதற்ற காலை" - (பதிற் 23=1-3)

எனும் பதிற்றுப்பத்துச் செய்யுட்பகுதியாலும் உணரலாம். இம்மரம் பொலிவற்ற அடிமரம் கொண்டது என்பதனைப் 'புன்கால் உன்னம்' (பதிற்.23=1-3) என்னும்தொடரு ம், இலை குறைந்து வறிதாகிய தலைப் பகுதி கொண்டது என்பதனை'அலந்தலை உன்னத்து அங்கவடு' (பதி: 23-1) என்னும் தொடரும் உணர்த்துகின்றன. உன்னமரம் பொன் போன்ற நிறமுடைய பூவினையும் சிறிய இலையினையும், புல்லிய காலி னையும் உடையது என்பதனைப் பதிற்றுப்பத்து (பதி.61=5-6) கூறு கின்றது.

உன்னமரம் பற்றி உரையாசிரியர்களின் விளக்கங்கள் வரு மாறு:-

உ.வே.சா. ஐயர்- "இலவமரம் என்பர்; இது நிமித்தம் பார்க்கும் மரங்களுள் ஒன்று" (பதி. 40.17) பதிற்றுப்பத்தின் பழைய உரையாசி ரியர்- உன்னம் - போர் செய்தற்குச் செல்வோர் நிமித்தம் பார்த்தற்கு ரிய ஒருவகை மரம். தன்னோடு பொரக்கருதுவார் நிமித்தம் பார்த்த வழி அவர்க்கு வெற்றியின்மையிற் கரிந்து காட்ட" (40-17)

பதிற்றுப்பத்தின் பிற்றை நாள் உரையாசிரியர்களான ஔவை. துரைசாமிப் பிள்ளை, அருளம்பலவனார் ஆகியோரும் இதே கருத்தினை வெவ்வேறு வகையில் தத்தம் மொழிகளால் வெளிப்படுத்தியுள்ளனர்.

இயற்கையில் அரிதாக நிகழும் நிகழ்ச்சிகள், தோன்றும் காட் சிகள் ஆகியவற்றுள் மன்பதைகட்கு நன்மை தீமைகள் உண்டாகும் என் றும், அவை எதிரது உணர்த்தும் குறிகளாக அமைவதும் உண்டு என் றும் கருதும் கருத்துப் பல்வேறு சமுதாயங்களிலும் தொன்று தொட்டே இருந்து வருகின்றது. அவற்றின் உண்மையினை, அறிவியலின் துணை கொண்டு நிறுவ முடியாமல் போய் விடுவதுமுண்டு!எனினும் அவை வழக்கிலும் செய்யுளிலும் இடம்பெற்று விளங்கும் பாங்கினைத் தவிர்த் தல் இயலாது.

வேங்கை மரத்தில் பூக்கொய்வோர் "புலி புலி"என்று கூவி னார்களாயின் அம்மரத்தின் கிளை தாழ்ந்து கொடுக்கும் என்பது பழந் தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளுள் ஒன்று. இன்று அவ் வாறு செய்து சோதித்துப் பார்த்தால் ஏமாற்றமே எஞ்சும்! நம்பிக்கை யில் அமைந்த வழக்கத்தின் அடிப்படையில், குறிஞ்சி நிலத் தலைவி

தன் தோழியரோடு வேங்கை மலர் பறிக்கச் சென்று, அம்மரக்கிளை தாழ வேண்டுமென்னும் கருத்தில் "புலி புலி" என்று ஆரவாரஞ் செய்தனர். அதனைப் புலியைக் கண்டு அஞ்சி உதவிக்கு ஓலமிடும் மகளிர் குரலாகக் கருதி ஒருவன் (தலைவன்) வந்து அவர்களிடம் புலி பற்றி வினவுகின்றான் என்று ஓர் அகநானாற்றுப் பாடல் அமைகின்றது (அகம்.48) . இங்குக் கூறப்பட்டது அறத்தொடுநிலை வகை பற்றித் தோழியால் செவிலித் தாய்க்கு உரைக்கப்பட்டதாயினும், ஒருபழைய வழக்கத்தை ஏறட்டுக் கொண்டு கூறியது நய மிக்கதாக உள்ளது.

உன்ன மரத்தால் நிமித்தம் அறிய-எதிரது உணர - முற்படுவதும் இதுபோலதொரு தொன்மையான, நம்பிக்கை அடிப்படையில் அமைந்த ஒரு வழக்கமாகும். போர்க்குச் செல்வோர் தாம் எய்த அவாவும் வெற்றியை அறிய விரும்பும் ஆர்வம் இதனால் புலனாகின்றது. இது போலும் வழக்கங்களில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டோர், நம்பிக்கை சாதகமாக அமையுமானால் அச்செயலில் ஈடுபடுவதும், பாதகமாக அமையுமானால் அச்செயலைத் தவிர்ப்பதும் பொதுவாக மேற்கொள்வர்.

உன்னம்பற்றி அமைந்த இந்த நம்பிக்கை தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட பழமையுடையதாகும். அதனைத் தொல்காப்பியர் தம் புறத்திணையியலுள்'வெறியறி சிறப்பின்'எனத் தொடங்கும் நூற்பாவில் (தொல். புறத்.5) .'உடல் வேந்தடுக்கிய உன்ன நிலையும்'என்று ஒரு துறையாகக் குறிப்பிட்டுள்ளார். அதன் விளக்கத்தில் இளம்பூரணர், 'உன்னம் என்பது மரம். அது தன்னாட்டகத்துக் கேடு வருங்கால் உலறியும், வாராத காலம் குழைந்தும் நிற்கும் 'என்றும், நச்சினார்க்கினியர்,'--------வேந்தன் கருத்தானன்றி அவற்றின் மறவன் வேந்தற்கு நீ வெற்றி கொடுத்தால், யான் நினக்கு இன்னது செய்வல்எனப் பரவுதலும், எம் வேந்தற்கு ஆக்கம் உளதெனின் அக்கோடு பொதுழுக எனவும், பகைவேந்தற்குக் கேடு உளதெனில் அக்கோடு படுவதாக எனவும் நிமித்தம் கோடலும்என இருவகைத் தெய்வத் தன்மை"என்றும், சோம சுந்தர பாரதியார், "பண்டைத் தமிழ் மறவர் போர்க்கெழு முன் உன்ன மரக் கோட்டில் மாலைகள் அடுக்கி நிமித்தங் கொள்வது வழக்காறு" என்றும் கூறியுள்ளனர். தொல்காப்பியர் கூறிய உன்ன நிலை என்னும் பெயரினை ஏற்றுப் பிற்றை நாள் புறப் பொருளிலக்கணியான ஐயனாரிதனார், தம் புறப் பொருள் வெண்பா மாலை , பொதுவியற் படலத்துள்,

'துன்னருஞ்சிறப்பின் தொடுகழல் மன்னனை
உன்னஞ்சேர்த்தி உறுபுகழ் மலிந்தன்று

என்று இலக்கணப்படுத்தியுள்ளார். மேலும், அதற்கு,

"...... _ மன்னரும்
ஈடெலாம் தாங்கி இகலவிந்தார் நீயுநின்
கோடெலாம் உன்னம் குழை"

என்று உன்ன மரத்தை வேண்டிப் பரவும் வகையில் இலக்கியமும் படைத்துள்ளார்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே பழந்தமிழக வீரர் உலகில் நிலவிய'உன்ன நிலை' என்னும் நிமித்தம் காணும் வழக்கம் சங்க காலத்திலும் அதன் பின்னரும் தொடர்ந்து வந்துளது. இரும்பிடர்த் தலையார் (புறம் 3) , பாலைக் கௌதமனார் (பதிற்.23) , ஆகியோர் உன்ன மரத்தின் இயல்பு பற்றிக் குறிப்பிட்டுச் செல்ல, மாமூலனார் 'கருத்து'என்னும் பொருளில் உன்னம் எனும்சொல்லை (அகம் 65) ஆண்டுள்ளார். காப்பியாற்றுக் காப்பியனார் (பதிற் . நான்காம் பத்து. 40) உன்ன நிலைக் கருத்தினை உடன்பட்டுக் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் ,' உன்னம் சாய' நேரி மலையில் வீற்றிருந்தான் எனப் பாடியுள்ளார். இதற்கு உரை வரைந்த பழைய உரையாசிரியர்,'உன்னம் சாய என்றது, தன்னொடு பொரக்கருதுவர் (நார்முடிச் சேரலின் பகைவர்) நிமித்தம் பார்த்த வழி அவர்க்குவெற்றி இன்மையிற் கரிந்து காட்ட என்றவாறு 'என்று விளக்கியுள்ளார். ஆனால், செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடிய கபிலர் தம் பாடலுள் பாரிவேளினைக் குறிக்க நேர்ந்த பொழுது புன் கால் உன்னத்துப் பகைவன் (பதிற் 61:6) என்று குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது.

கபிலர் பாரிவேளொடு பல்கால் உடனிருந்து பழகியவராதலின் அப்பெருவீரனின் பண்புகளையெல்லாம் நன்குணர்ந்தவராவார். அவன் கொடை மாட்சியில் சிறந்து விளங்கியது போலவே படைமாட்சியிலும் திகழ்ந்துள்ளதனை அருகிருந்தே கண்டறிந்திருப்பார். போர் குறித்துச் செல்ல நேர்ந்த சமயங்களில்,உன்ன நிலை பாதகமாக இருப்பதனை அறிந்தும், அதனால் மனம் தளர்ந்து முடங்கிவிடாமல், அதனைப் புறக்கணித்துக் கிளர்ந்தெழுந்து போரில் ஈடுபட்டு வாகை சூடிய வாய்ப்புக்கள் பலவற்றை நேராகக் கண்டிருத்தல் கூடும். உன்னம் (தெய்வக் கருத்து அல்லது ஊழ்) மாறுபட நின்றாலும், அதனைப் புறக்கணித்துப் போர் புரிந்து வென்றமையைக் கண்டமையால் கபிலர் அவ்வாறு

பாராட்டினார். பிறருக்கெல்லாம் பகைவனாக விளங்கிய உன்ன மரத்திற்குப் பாரிவேள் பகைவனாக விளங்கினான் என்னும் கருத்தில் 'உன்னத்துப் பகைவன்' என்று பாரியைப் பாராட்டியுள்ளார்.

இந்தப் பாராட்டுதல் கொண்டு அறியத்தக்க உண்மை ஒன்றுண்டு. ஒருவன் தான் மேற்கொள்ளும் செயல் தோல்வியுறும் குறிகள் (நிமித்தங்கள்) காணப்பட்டாலும் அவற்றுள் துவண்டுபோகாமல், முயன்று செயல்பட வேண்டும்; அம்முயற்சி வெற்றியினை உண்டாக்கும் என்பதே அந்த உண்மையாகும். கபிலரின்,'உன்னத்துப் பகைவன்'என்னும் தொடரின் உண்மை, என்றோ வாழ்ந்த பாரிக்கும் அவனது வீரத்திற்கும் மட்டுமேயன்றி, வாழ்க்கையின் பல துறைகளிலும் ஈடுபடும் மக்கள் அனைவருக்கும், எக்காலத்திற்கும் பொருந்துவதாகும். "ஊழையும் உப்பக்கம்காணல் கூடும்! தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி ஊதியம் பயக்கும்" என்னும் குறட் கருத்துக்கள், ஓராற்றன் இத்தொடரால் நினைவு படுத்தப்படுமாற்றை உணரலாம்.

உன்னத்துப் பகைவனாயிருந்தும் பாரி, "நளி கொள்முரசின்" மூவேந்தரும் பறம்பினை முற்றிய காலை இறந்துபட்டனனே என வினவுபவர் உளராயின், "அது பாரியின் தோல்வியாகாது, வஞ்சகத்தின் வெற்றி யாகும்" என்பதே அவர்க்குக் கூறும் விடையாகும். பாரிவேளின் பெருவீரத்தைப் பாராட்டும் வகையில் கபிலர் உருவாக்கிய உன்னத்துப் பகைவன் என்னும் தொடர், வாழவிரும்புவோர் அனைவரும் நினைவு கொள்ளத்தக்க ஒன்றாகும். அத்தொடரை உருவாக்கியபெருமை கபிலருக்கும் காத்தளித்த பெருமை பதிற்றுப்பத்திற்கும் உரியதாகும்.

***

# உன்னத உடல் நலம் உயர்வான வாழ்வு தரும்

## உடல் நலப் பரிசோதனைத் திட்டங்கள்

- எக்ஸிகியூட்டிவ் முழு உடல் நலப் பரிசோதனை
- முழு உடல் நலப் பரிசோதனை
- முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- குழந்தைகளுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- திருமணத்திற்கு முன் பரிசோதனை
- முழ இருதய பரிசோதனை
- முழு நீரிழிவுப் பரிசோதனை
- புற்று நோய்ப் பரிசோதனை
- மதுப் பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழு சோதனை
- ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- பொது உடல் நலப் பரிசோதனை
- வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 6.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உட்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்.

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்கு தொலைபேசியின் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை நேரம் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை

**மாஸ்டர் ஹெல்த் செக்–அப் டிபார்ட்மெண்ட்**

# மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

லேக் ஏரியா மேலூர் ரோடு, மதுரை–625 107. போன் : 536361–68
Fax:536353 E-mail:mmhrc@md2.vsnl.net.in


அன்பு அச்சகம், மதுரை–1. போன்:741116